விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 25
ஒலி 075 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 20 ஞாயிற்றுக்கிழமை (03.03.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

சாந்தனின் பூதவுடலுக்கு

## பொதுமக்கள் இன்று அஞ்சலி செலுத்தலாம்

(யாழ்ப்பாணம்)

சாந்தனின் பூதவுடலுக்கு பொது மக்கள் இன்று அஞ்சலி செலுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில் இன்று காலை 8 மணிக்கு வவுனியாவில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படும் சாந்தனின் சடலம் பின்னர் 9 மணியளவில் மாங்குளம் பகுதிக்கு எடுத்துவரப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து காலை 10.30 19



உடற்கூற்றுப் பரிசோதனை நிறைவு

## சாந்தனின் பூதவுடல் உறவினர்களிடம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

சாந்தன் உடல் மீதான பிரேத பரிசோதனைகள் நிறைவடைந்ததை அடுத்து, அவரது பூதவுடல் உறவினர்களிடம் நேற்று கையளிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சாந்தன் என்கிற சுதேந்திரராஜா உடல்நலக்குறைவால் சென்னை ராஜீவ் காந்தி அரச வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த நிலையில், கடந்த 19

# தமிழ்த் தேசிய துக்க தினம் இன்று

## சாந்தனுக்கு அஞ்சலி செலுத்த ஒன்றுதிரளுமாறு அழைப்பு

*(யாழ்ப்பாணம்)*

சாந்தனின் மறைவை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை தமிழ்த் தேசிய துக்க தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

சாந்தனுக்கு அஞ்சலி செலுத்த தமிழ்ப் பற்றாளர்கள் அனைவரையும் ஒன்றுதிரளுமாறும் அழைப்பு விடப்பட்டுள்ளது.

*(19ஆம் பக்கம் பார்க்க)*

சாந்தனின் பூதவுடல்

## தாய் மண்ணுக்கு இன்று வந்தடையும்

(யாழ்ப்பாணம்)

சென்னையில் உயிரிழந்த சாந்தனின் பூதவுடல் இன்று அவரது சொந்த இடமான உடுப்பிட்டிக்கு வந்தடையும்.

பிரேதப் பரிசோதனை மற்றும் பல வேறு இழுபறிகளுக்குப் பின்னர் சாந் 15

## உடுப்பிட்டியில் நாளை சாந்தனுக்கு இறுதிக்கிரியை

(உடுப்பிட்டி)

சாந்தனுக்கு நாளை திங்கட்கிழமை இறுதிக் கிரியைகள் நடைபெறவுள்ளது.

உடுப்பிட்டியில் அமைந்துள்ள சாந்தனின் வீட்டுக்கு இன்று மாலை பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு நாளை இறுதிக்கிரியைகள் நடைபெற்று அவரது குடும்ப மயானமான எள்ளங்குளம் மயானத்தில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது. (மு-7)

## முல்லை அளம்பிலில் மோ.சைக்கிள் விபத்து

ஒருவர் உயிரிழப்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு அளம்பில் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இச்சம்பவம் 19

## யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர்



(ஜெனிவா)

யுத்தம் முடிந்து 15 வருடங்களாகியும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை என ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க் கவலை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 55ஆவது கூட்டத்தொடரில் உரையாற்றியபோதே 19

## கொத்து, பிறைட் றைஸ் தேநீர் விலைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

நள்ளிரவு முதல் உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படும் என அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி கொத்து மற்றும் பிறைட் றைஸ் ஆகியன 50 ரூபாயினால் அதிகரிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தேநீர் 5 ரூபாயினாலும் பால் தேநீர் 10 ரூபாயினாலும் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் சிற்றுண்டிகள்10ரூபாயினாலும் 20

## பாலைதீவில் படகு விபத்து

7 பேர் படுகாயம்

(பூநகரி)

பாலைதீவு திருவிழாவுக்கு சென்ற படகுகள் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் ஏழு பேர் படுகாயமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 20

முல்லை புதுக்குடியிருப்பில்

## ஆண் ஒருவரின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட வள்ளிபுனம் கரித்தாஸ் குடியிருப்பில் கிணற்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சடலமானது நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

74 வயதுடைய அதே பகுதியினை சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (மு-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## Room வாடகைக்கு

மாணவர்களுக்கும், வேலை செய்யும் பெண்களுக்கும் யாழ் இந்துக் கல்லூரி அருகில் சகல வசதிகளையும் கொண்ட அறை வாடகைக்கு உண்டு. பெண்கள் மட்டும்.

(19334)

**077 615 3645**

## காணி தேவை

யாழ் மாநகர எல்லைக்குள் அமைதியான சூழலில் ஒரு பரப்பு காணி தேவை. காணி உரிமையாளர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :

(19334)

**077 615 3645**

## வாடகைக்கு

யாழ் நகருக்கு அண்மையாக மகளிருக்கான Beauty parlour நடாத்துவதற்கேற்றதொரு சிறிய பகுதி தளபாடங்களுடன் ரூ 25,000/=க்கு வாடகைக்கு உண்டு.

NVQ - 4 அல்லது அதற்கிணையான தகைமை கொண்டவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**077 711 0383**

(C-8452)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378 | 076 097 3127

## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், அரச உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், தனியார் துறையினர் மற்றும் வெளிநாட்டு மணமக்கள் ஏராளமாக உள்ளனர்.

மிகப்பொருத்தமான ஜாதகங்கள் எம்மால் தெரிவு செய்து உடன் தரப்படும்.

(19342)

264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.

**021 222 9306, 077 138 7596, 071 999 9306**

## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற **SILVER SHIELD SOCKS** பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்**

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-8458)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**

303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.

**021 222 5392, 076 315 6470**

## காணி விற்பனைக்கு

புத்தூர் மட்டுவில் பிரதான வீதியோரம் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 20 அடி பாதையுடன் காணிதுண்டுகள் விற்பனைக்கு உண்டு.

**2 பரப்பு - 5 இலட்சம்**

இன்னும் 20 துண்டுகள் மாத்திரம் உண்டு.

பார்வையிடும் நேரம் :

காலை 8.30 தொடக்கம் 6.00 வரை

மேலதிக விபரங்களுக்கு

(19330)

**074 260 0617, 076 109 8504**

## பதவி வெற்றிடம்

தமிழ் ரைப்பிங் மற்றும் கணனி பக்க வடிவமைப்பு அனுபவமுள்ளவர்களும் பயிலுனர்களும் தேவை.

(ஆண், பெண் இருபாலாரும்)

யாழ் நகருக்கு அண்மையில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

**076 097 3121**

## பாராட்டி வாழ்த்துகின்றேன்




டாக்டர்

**செ.மோகனதாஸ் சுவாமி**

அவர்களின்
ஆன்மீகப் பணியை
கௌரவிக்கும்
வகையில் கடந்த 25.02.2024
அன்று கொழும்பு தமிழ்ச்
சங்கத்தில் வைத்து
இந்தியா – தமிழ்நாடு ABJ
அறக்கட்டளையினரால்

**(ABJ VIP GLOBAL - 2024)**

"சிறந்த ஆன்மீகவாதி" எனும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். சுவாமிகளின் பணி பல்லாண்டு தொடர வேற் பெருமானின் அருள் வேண்டி வாழ்த்துகின்றேன்.

(C-8447)

சுவாமிகளின் [illegible]

## Green Home Engineering

*We Design Your Dreams*

**Join Hands to Shape the Future**

- ❖ **Site Supervisor & Technical Officer**
  - NCT Civil / NVQ Level 5 or Equivalent Qualification
  - Experience in Building Projects
- ❖ **Assistant Quantity Surveyor**
  - NCT (QS) or Equivalent Qualification
  - Experience in Building Projects
- ❖ **Accounts Assistants**
  - Good Knowledge in Accounting Standards
  - Experience in Accounting Work

**Apply Now**

**Send Your Resume To:**

green.home.lk@gmail.com

(C-8457)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



மலர்வு 02 – 09 – 1967

உதிர்வு 01 – 03 – 2024

## அமரர். சுந்தரலிங்கம் ரவிச்சந்திரன்

(அதிபர்-வ/பூவரசு ஆரம்ப பாடசாலை)

யாழ்ப்பாணம், மருதங்கேணி, வத்திராயன் தெற்கைப் பிறப்பிடமாகவும் வவுனியா, வேப்பங்குளத்தை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட காலஞ் சென்றவர்களான சுந்தரலிங்கம் கிருஷ்ணவேணியம்மா தம்பதியினரின் மூத்த புதல்வனும், காலம்சென்ற குருகுலசிங்கம்-மலர் தம்பதிகளின் பாசமிகு மருமகனும், திருமதி.சுமதி ரவிச்சந்திரனின்(முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் வலயக்கல்வி அலுவலகம், வவுனியா தெற்கு) அவர்களின் அன்புக் கணவரும், அபினேஷ், கிதுர்ஷன் ஆகியோரின் ஆருயிர் தந்தையுமான **சுந்தரலிங்கம் ரவிச்சந்திரன்** அவர்கள் 01.03.2024 அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.03.2024 நாளை திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் மு.ப 10 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் தட்சணாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு
077 8532445(மனைவி)
077 222 5028(மகன்)
024 222 3204

வேப்பங்குளம்,
வவுனியா. (சி-8446)

தகவல்:
குடும்பத்தினர்.

# 2024 இல் நடைபெறவுள்ள பரீட்சைகளுக்கான திகதிகள் அறிவிப்பு

2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பாட சாலை பரீட்சைகள் மற்றும் அவற்றின் திகதிகளை பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டிற்கான கா.பொ.த சாதாரண தர பரீட்சை 2024 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆம் திகதி முதல் மே மாதம் 15 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

அத்துடன் 2024 ஆம் ஆண்டிற்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை செப் டெம்பர் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

அத்துடன் 2024 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சை நவம்பர் 25 ஆம் திகதி முதல் டிசெம் பர் 20 ஆம் திகதி வரை நடைபெறும் என பரீட்சை ஆணை யாளர் அமித் ஜயசு ந்தர அறிவித்துள்ளார்.

இதேவேளை, 2024 ஆம் ஆண்டுக் கான க.பொ.த சாதாரண தரப் பரீட்ஸ்சயை நடத்துவதற்கான உத்தேச திகதிகள் எதிர் வரும்காலங்களில் அறிவிக்கப்படும் என பரீ ட்சை ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.(நி)

# கொழும்பை வந்தடைந்த ரஷ்ய ஏவுகணை கப்பல்


ரஷ்ய பசுபிக் கடற்படை யின் ஏவுகணை கப்பல் வர்யாக் கொழும்பு துறை முகத்திற்குவருகை தந்து உள்ளது. கடற்படை மரபுப் படி இல ங்கை கடற்படை யினரால் கப்பலுக்கு வர வேற்பு அளிக்கப்பட்டதாக இலங்கை கடற்படை தெரி வித்துள்ளது.

கப்பல் வரவேற்பு விழா வில் இலங்கையில் உள்ள ரஷ்ய தூதரக ஊழியர்கள், அந்நாட்டின் கடற்படை அதி காரிகள் மற்றும் துறைமுக சேவைகளின் பணியாள ர்கள் கலந்து கொண்டுள் ளனர். (நி)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் திருமதி.இராஜவதனி ஹனி
அவர்களின் அன்புத் தந்தை

## திரு. பேனாட் இராஜவரோதயம் (SK)



அவர்கள் (29.02.2024) வியாழக்கிழமை
அமரத்துவம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/புனிதசாள்ஸ் ம.வி.
பிரதான வீதி யாழ்ப்பாணம். (9325)


நட்பின் சிறகுகள்

இலங்கை வான் படையின் வான வேடிக்கை

73ம் வருட பூர்த்தியின் கொண்டாட்டம்


SRI LANKA AIR FORCE
GUARDIANS OF THE SKY 1951 - 2024

AIR TATTOO - 2024 - JAFFNA

மார்ச் 6,7,8,9,10 - காலை 10.00 மணி - இரவு 10.00 மணி வரை - யாழ் முற்றவெளி மைதானத்தில்

SALES - EXHIBITION
PROMOTION
FOOD
STALLS AVAILABLE
மேலும் பல விளம்பர சேவைகள்





இலங்கையில் முதல் முறையாக
இந்தக் கொடியில் உங்கள்
விளம்பரம் இடம்பெற வேண்டுமா?

யாழ் பாடி
தங்குமிடம் - யாழ் உணவகம்
Yarl Pardy
Rooms - JAF TRAD RESTAURANT
51, Amman Road, Nallur, Jaffna.
021-222 68 68 | 0777 34 00 26

+94 713 092 525
+94 767 601 171
+94 759 360 370 (யாழ்)

PROMOTERS
Iron Brit International (Pvt) Ltd
55/5, Alwis Place,
Colombo 03.

(C-8455)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்ரம்-ராஜன்-கங்கு வெற்றிக் கிண்ணம்-2024
# கே.சி.சி.சி அணி பிளேஓவ் சுற்றுக்கு தகுதி



விக்ரம் - ராஜன் - கங்கு வெற்றிக்கிண்ணத் தொடரின் ஆறாவது தகுதி காண் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை (25.02.2024) அன்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் கே.சி.சி.சி அணி, யாழ்.பல்கலைக் கழக அணியை 4 இலக்குகளால் வெற்றி பெற்று பிளேஓவ் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது.




முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.பல்கலைக் கழக அணி 30 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 180 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் சுகீதன்-49, அஸ்நிஸ் கான்-47, தயூஸ்ரன்-19 ஓட்டங்களை பெற்றனர்.

பந்துவீச்சில் கே.சி.சி.சி அணியைச் சேர்ந்த விதுஸன் - 25 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், துஸ்யந்தன்-41 ஓட்டங்களை கொடுத்து 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

181 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய கே.சி.சி.சி அணி 27.1 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்து 184 ஓட்டங்களைப் பெற்றது.


பந்துவீச்சில் யாழ்.பல்கலைக்கழக அணியை சேர்ந்த பாலசூரிய 32 ஓட்டங்களை கொடுத்து 3 இலக்குகளையும் த்யுஸ்ரன் 11 ஓட்டத்தை கொடுத்து ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

வெற்றி பெற்ற கே.சி.சி.சி அணி பிளேஓவ் விலகல் சுற்றில் கலந்து கொள்ளும் என்பது குறிப்பிடத்தக்கது. இப்போட்டியில் சிறந்த வீரராக கே.சி.சி.சி அணியை சேர்ந்த ஜெயரூபன் தெரிவு செய்யப்பட்டார். (நி)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

எமது கல்லூரியின் இணைந்த கணித பாட ஆசிரியர் திரு.இ.முருகமூர்த்தி அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் இராமசாமி விசாலாட்சி**



தோற்றம்:-20.12.1934
மறைவு:- 02.02.2024

அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவர்களின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

(C-8456)

## சிவபூமி அறக்கட்டளை
### பணிநிலை வேண்டுகோள்

**கோண்டாவில் சிவபூமி பாடசாலை அதிபர் பதவி விண்ணப்பம் கோரல்**

Closing Date 15.03.2024

**எதிர்பார்க்கப்படும் தகைமைகள்.......**

- இளைப்பாறிய மகளிர் பாடசாலை அதிபராக இருத்தல்.
- வயதெல்லை 45 - 62 வயது வரை.
- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் அல்லது கல்வியியல் தகுதி பெற்றிருத்தல் வேண்டும்.
- கோண்டாவிலில் அமைந்துள்ள பாடசாலையிலிருந்து 5 KM எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
- மாதாந்த கொடுப்பனவுகள் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தகுதியுடையோர் கீழ் குறிப்பிட்ட மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது கீழ் குறித்த தொலைபேசி இலக்கத்துக்கோ தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.
மின்னஞ்சல் :- Sivapoomi@gmail.com
தொலைபேசி:- 075 844 8787 (Whatsapp Message only)

### புதிய மாணவர்கள் அனுமதி- 2024

கோண்டாவில் மற்றும் கிளிநொச்சி சிவபூமி மனவிருத்திப் பாடசாலைக்கு புதிதாக மாணவர்கள் அனுமதி
2024ஆம் ஆண்டுக்குரிய சிறார்களுக்கான பாடசாலை புதிய மாணவர்கள் அனுமதி நடைபெறுகின்றது.

- மாணவர்களுக்கான போக்குவரத்து. உணவு இலவசமாக வழங்கப்படும்.
- மாற்றுவலுவுடைய சிறார்களுக்கு பயிற்றப்பட்ட விசேட கல்வி ஆசிரியர்களினால் கல்வி கற்பிக்கப்படும்.
- கோண்டாவிலில் அமைந்துள்ள தொழிற்பயிற்சிப் பாடசாலையில் சிறார்களுக்கான தொழிற்பயிற்சி நடைபெறும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் - சிவபூமி பாடசாலை கோண்டாவில் என்னும் முகவரிக்கு நேரடியாக வருகை தந்து அனுமதியினை பெற்றுக் கொள்ளலாம்.

(19316)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உரும்பிராய் சந்தியிலிருந்து கோப்பாய் செல்லும் பிரதான வீதி முகப்புடன் நான்கு - 4 பரப்பு நிலப்பரப்பு காணி விற்பனைக்குண்டு.

**சகல ஆவணங்களுடன் சிவப்புமண், நன்னீர் ஊற்று, கிருஷ்ணன் கோவில் அருகாமை, தரகர் தேவையில்லை.**

தொடர்பு :-

**077 638 5683,**
**075 638 5684**

(19341)

'நான் கொடுப்பதற்கு பழகிக் கொண்டேன்.
காரணம் என்னிடம் அதிகம் இருப்பதால் அல்ல.
ஒன்றுமே இல்லாமல் இருப்பவன் வலி புரிந்து கொண்டதால்'

## விற்பனைக்கு

யாழ்.நகரின் வர்த்தக மையப் பகுதியான வைத்தியசாலை வீதியில் CTB தரிப்பிடத்திற்கு முன்னால் 15 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட 03 மாடி கடையும், 20 அடி அகலமும் 200 அடி நீளமும் கொண்ட காணித்துண்டும், 25 அடி அகலமும் 216 அடி நீளமும் கொண்ட மாடிக் கடையும், யாழ்.மின்சார நிலைய வீதியில் CTB தரிப்பிடத்திற்கு பின்னால் 12 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட தனிக்கடையும், 50 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட 03 மாடிக்கடையும் 03 பரப்புக் காணியும், யாழ்.பிரப்பங்குளம் வீதியில் இல.43இல் அமைந்த காணியும் வீடும், யாழ்.காரைநகரில் கசூர்னா கடற்கரைக்கு அண்மையில் 80 பரப்புக் காணியும், காரை நகர் மேற்கு வீதியில் 04 பரப்புக் காணியும், யாழ். விக்டோரியா வீதியில் 16 பரப்புக் காணியும் 12 பரப்புக் காணியும் 06 பரப்புக் காணியும், யாழ்.கஸ்தூரியார் வீதியில் 01 பரப்புக் காணியும், யாழ்.சிவப்பிரகாசம் வீதியில் 03 பரப்பில் மாடி வீடும் அமைந்த காணியும் வீடும், யாழ்.ஸ்ரீனிவாசன் வீதியில் 02 பரப்புக் காணியும் வீடும், கொழும்பு வெள்ளவத்தை விவேகானந்தா வீதியில் 06 Purchersல் அமைந்த மாடி வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :

**077 723 2535**

(C-8453)

குறிப்பு: தரகர் உட்பட அனைவரும் தொடர்பு கொள்ளவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாந்தனின் மறைவிற்கு பல்கலையில் கறுப்புக் கொடி



(யாழ்ப்பாணம்)

மறைந்த சாந்தனுக்கு அஞ் சலி செலுத்தும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகம் எங்கும் கறுப்புக்கொடி பறக்க விடப்பட்டுள் ளது.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று விடுவிக்கப்பட்ட சாந்தன், திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டி ருந்தார்.

அவர் இலங்கை திரும்பலாம் என கடந்த 24 ஆம் திகதி இந்திய மத்திய அரசு அனுமதி வழங்கியிரு ந்தது.

இந்நிலையில், கல்லீரல் செய லிழப்பு காரணமாக சென்னை ராஜிவ் காந்தி அரசு மருத்துவ மனையில் சாந்தன் அனுமதிக்க ப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், கடந்த 28ஆம் திகதி மாரடைப்பு காரணமாக அவர் உயி ரிழந்மை குறிப்பிடத்தக்கது.(நி-33)

உ
சிவமயம்
ஓம் நமசிவாய

# இந்து தன்னார்வ தொண்டர் சங்க பாதயாத்திரை

## மகா சிவராத்திரி வழிபாடு

## சைவ மக்கள் எல்லோரும் கலந்து சிவ அருள் பெறுவோம்

**மகா சிவராத்திரி நமது வருங்கால சந்ததியினர்**
**ஆன்மீக நெறிப்படுத்தும் பாதயாத்திரை**
**சைவநெறி ஆகிய சைவ மரபு**
**வழிபாட்டுக்கு முழுமையாக செலவிடுவது**
**எல்லா நலன்களையும் தரும்.**

**இந்து தன்னார்வ தொண்டர் சங்க பாத யாத்திரையில் சைவ மக்கள் எல்லோரும் கலந்து சிவன் அருள் பெறுவோம்.**

4.3.2024 திங்கள் மாலை 4 மணியளவில் புதுக்குடியிருப்பு மூங்கிலாறு சிவன் ஆலயத்தில் ஆரம்பித்து அருள்மிகு திருக்கேதீஸ்வரம் வரையும் பாதயாத்திரையாக மனம், மொழி, மெய்(உடம்பு) இம் மூன்றும் சிவத்திடமே இருக்க,பாதயாத்திரையில் தோன்றும் ஆலய முன்றலில் ஓர் தூய நெய் விளக்கு ஏற்றி திருமுறைகளை ஓதியும், நாம உச்சாடனமாக 'ஓம் நமசிவாய' எனவும் விண்ணில் ஒளியை ஏற்றி வழிபடுவோம்.

**இச் சிறிய வழிபாட்டில் பெரிதும் மகிழ்ச்சி அடைபவர், ஈடுஇணையற்ற முழுமுதற் பெருங்கடவுளாகிய சிவபெருமான் ஆகும். இந்த வழிபாடு ஓர் சைவ மரபு ஆகும்."ஓம் நமசிவாய"**

ஒரு தலத்தில் உள்ள மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றையும் சிறப்பித்து மானிடம் செழி க்க, திருமுறைகள் தந்த திருஞானசம்பந்தர், சுந் தரமூர்த்திநாயனார் ஆகியவர்களுடன் மற்றும் வழிபாட்டாளர்கள் பாடல் பெற்ற திருத்தலம் அருள்மிகு திருக்கேதீஸ்வர ஆலயம்.

"ஓம் நமசிவாய" இங்கு கேது, துவஷ்டா, மண்டோதரி, மாதேவடிகள் ஆகிய நால்வரும் ஆதியில் வழிபட்டு அருள் பெற்றனர்.

**இந்தியாவில் இருந்து பல சித்தர்கள் இரா மேஸ்வரத்தில் படகு மூலம் வந்து மன்னார் துறைமுகத்தில் இறங்கி திருக்கேதீச்சரம் மற்றும் இலங்கையில் பல பாடல் பெற்ற ஆலயம் கதிர் காமத்தில் பாதயாத்திரிகர் களாக வழிபட்டு எண்ணிலடங்காத நலன் களை அடைந்ததனை புராண வரலாறு மூலம் அறியலாம்.** "ஓம் நமசிவாய"

அநாதியாகவே ஆணவ மலபந்தத்தால் அறிவு முடங்கிக் கட்டுண்டு கிடக்கும். **நமது வருங்கால சந்ததியினர் தவறான பாதையிலும் சீர்கேடு களையும் நீக்கவும் இறைவன் நாமமும் திரு முறைகளை ஓதியும் எல்லோரும் ஆசாரசீல ராகவும், சிவசின்னங்களாக திருநீறு அணிந்தும் உருத்திராட்ச மாலை அணிந்தும் பாதயாத்திரையில் கலந்து அனைவரும் ஒன்றாகத் திரளுவோம்.**

பாதயாத்திரை வரும் பாதை பூராகவும் கும்பம் வைத்து அவ் ஊர் மக்கள் சிறப்பித்தும் கலந்தும், பெரியோர்களும் நமது சந்ததியை நல்வழிப் படுத்துவது ஒவ்வொருவரது கடமையாகும்.

காசி யாத்திரை செல்வோர் கங்கையில் "சிவ சிவ" என ஸ்நானம் செய்து பின் ஜலத்தை குடங்களிலே தாங்கிச் சென்று விஸ்வநாத மூர்த்தியை நீராட்டி பூசிப்பது வழக்கம்.

**இவ்வாறே ஈழ நாட்டுத் திருக்கேதீச்சரத்தி லும் பாலாவியில் "சிவ சிவ" எனத் தீர்த்தம் நீராடி ஈர உடையுடன் தீர்த்தக்காவடியாக** சுமந்து புராதன மகாலிங்கத்திற்கு அபிசேகம் செய்யப்படுவது ஓர் சிறப்பு.

திருக்கையிலாயம், காசி, திருக்கேதாரம், திருக்காளத்தி, சிதம்பரம், திருவாலவாய், கும்பகோணம்,திருவாரூர்,திருவண்ணாமலை, இராமேஸ்வரம் பாடல் பெற்ற இந்தியா சிவத் தலங்களுக்கு நிகராக திருக்கேதீச்சரம் ஈழத் திருநாட்டில் உலகச் சைவ மக்கள் அனைவரும் வழிபாட்டுடன் போற்றிச் சகல நலன்களையும் நமது இளைய சமுதாயம் சைவ சமயப் பக்தி யுடன் இறையருளைப் பெற்று உலகின் உண் மைப் பொருள் **"சிவனே" என்பதை நன் குண ர்ந்து வையத்துள் வாழவாகும்.**"ஓம்நமசிவாய"

ஈழத்தில் வேறு எங்கும் இல்லாத அளவு இலட்சக்கணக்கான பக்தர்கள் ஒன்றுகூடி வழிபடும் சிறப்பு திருக்கேதீச்சரம் என்று சொன்னாலேயே. சிவராத்திரி விழாதான் பலருக்கும் நினைவுக்கு வரும்" ஓம் நமசிவாய"

இந்து தன்னார்வ தொண்டர் சங்கம் நடத்தும் பாதயாத்திரையில் ஆசார சீலராக அனைவரும் கலந்து அளவிலா நலன்களை சிவன் தருவான்.

"ஓம் நமசிவாய"



**க.கு.க சிவபாலன்**
**காரைநகர் ஈழத்துச்சிதம்பரம்**
**திருத்திண்ணபுரம்**
**மாணிக்கவாசகர்**
**மடாலயம் பாதுகாவலர்**
**ஓம் நமசிவாய**

(சி-8445)

# இராசிபலன்

**03.03.2024**
**மாசி 20, ஞாயிற்றுக்கிழமை**
**அட்டமி பின்னிரவு 04.04ணிவரை**

**அனுசம் முற்பகல் 11.45மணிவரை**
**சுபநேரம் 9.26-10.56 ணிவரை**
**இராகுகாலம் 4.56 - 6.26 மணிவரை**

**சந்திராஷ்டமம்**
**அச்சுவினி,பரணி**

**வளவன்**




**மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், ஒரு வேலையை முடிக்க ஒரு முறைக்கு பலமுறை அலைய நேரிடலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.**




**கடன் தொல்லைகள் குறையும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், பொருளாதார நிலை உயரவழி வகை செய்வீர்கள், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம்.**




**அடுத்தவர் விவகாரங்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், நன்மைகள் நடைபெறும் நாள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.**




**பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமை அடைவீர்கள், உறவினர் பகை மாறும், தன்னம்பிக்கை துளிர் விடும் நாள், உதிரி வருமானங்கள் வந்து சேரும்.**




**வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமை அடைவீர்கள், உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம்.**




**உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், வழிபாடு முன்னேற்றம் தரும், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், போசன சுகமுண்டு**




**தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், பக்குவமாக நடந்து பாராட்டு பெறுவீர்கள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.**




**வளர்ச்சிப் பாதை நோக்கி அடி எடுத்து வைப்பீர்கள், வழிபாட்டில் மகத்துவம் காணவேண்டிய நாள், வருமானம் திருப்தி தரும், போசன சுகமுண்டு.**




**கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், உடல்நலனில் கவனம் தேவை, சுப விரயங்கள் கூடும் நாள்.**




**பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள், முன்னேற்றத்திற்கு உதவிய சிலரை சந்திக்கும் வாய்ப்புண்டு, இலாபகரமான நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.**




**வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், நண்பர்கள் உங்களின் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர், அருமையான நாள்.**




**திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, கடுமையான எதிர்ப்புகள் கூட திடீரென சாதகமாகிவிடலாம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவளிப்பது.

## அரச நாடக விழா-2024

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் அரச நாடக விழா- 2024 இற்கான போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. நாடகத்துறையில் ஆர்வ முள்ளவர்கள் இப்போட்டியில் பங்கு பெறலாம்.

போட்டிக்கான விண்ணப்ப முடிவுத்திகதி 10.04. 2024 ஆகும். போட்டிக்கான சுற்று நிருபத்தினையும் விண்ணப் பப்படிவத்தினையும் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற் றுக் கொள்ளலாம் என பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (நி)

## கைதடி வடக்கு மற்றும் கிழக்கிற்கான பேருந்து சேவையை வழங்குமாறு கோரிக்கை

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கைதடி வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளுக்கான பேருந்து சேவையை மீளவும் ஏற்படுத்தித் தருமாறு கற்றல் மற்றும் தலைமைத்துவத்தில் பெண்கள் கழகத்தினர்- இலங்கை போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய முகாமையாளரிடம் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர்.

இது தொடர்பாக போக்குவரத்துச்சபைக்கு அவர்கள் அனுப்பியுள்ள கோரிக்கைக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஆறு கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட கைதடி வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களுக்கான போக்குவரத்து வசதி வாய்ப்பை மீளவும் ஏற்படுத்தித் தரவேண்டியது காலத்தின் கட்டாயமாக அமைந்துள்ளது.

கைதடி வடக்கு மற்றும் கிழக்கு கிராமங்கள் கைதடிச் சந்தியில் இருந்து 4 கிலோமீற்றர் தொலைவில் உள்ளன.

சாவகச்சேரி மற்றும் யாழ்ப்பாணம் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் மேற்படி கிராமங்களுக்கு இன்மையால் பாடசாலை, சந்தை, சமுர்த்தி வங்கி, வைத்தியசாலை உள்ளிட்ட அத்தியாவசிய இடங்களுக்கு செல்வதற்கு கிராம மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

கைதடி வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்கள் ஊடாக கடந்த காலத்தில் இலங்கை போக்குவர்த்துச் சபையின் போக்குவரத்து சேவை முன்னெடுக்கப்பட்ட போதிலும்அது உள்நாட்டு யுத்த நிலைமை காரணமாக 2006ஆம் ஆண்டுடன் நிறுத்தப்பட்டு இன்று வரை அந்த சேவை மீள வழங்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

கைதடி வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசத்தில் 883 குடும்பங்களைச் சேர்ந்த 2591 மக்கள் வசித்து வருகின்றனர்.

இதில்352 பாடசாலை மாணவர்கள், 159 பெண் தலைமைக் குடும்பங்கள், 31 மாற்றுத்திறனாளிகள் மற்றும் பேருந்தில் செல்ல வேண்டிய தேவைப்பாடு உடைய 209 பேர் வசித்து வருகின்றனர். எனவே இவற்றை கருத்திற் கொண்டு கைதடிக் கிராமங்களுக்கான பேருந்து சேவையை மீளவும் முன்னெடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருந்தனர்.(நி-30)

## முன்னாயத்த கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய மகோற்சவம் எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளதனால் இது தொடர்பான முன் ஏற்பாட்டுக்கூட் டம் 6 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது என சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (நி)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை ஆறுகால்மடம் அரசடி ஸ்ரீஞான வைரவர் சுவாமி திருக்கோயிலின் வருடாந்த அலங்கார உற்சவம் நாளை மறுதினம் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

. எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை சங்காபிஷேக விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து திருவூஞ்சல் பாட்டு இடம்பெறும். அதனைத் தொடர்ந்து வைரவர் பெருமான் வீதி வலம் வரும்காட்சிஇடம்பெறும் என ஆலய பரிபாலனசபை அறிவித்துள்ளது. (நி-5-6)

## ஆவணக்காட்சிப் பெட்டகத்திற்கான பாரம்பரியப் பொருட்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

அழிவடைந்து செல்லும் மரபு உரிமைசார் பாரம்பரியங்க ளைப் பாதுகாத்து. அழிவும் திரிபுமின்றி அடுத்த தலை முறைக்கு கையளிக்கும் வரலாற்றுக் கடமையை மேற் கொள்ளும் முகமாக யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் ஆவணக்காட்சிப் பெட்டகம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. பழைமையும் பெருமையும் மிக்க எம் பண்பாட்டம் சங்களை பாதுகாப்பாகப் பேணல் மற்றும் காட்சிப்ப டுத்தல் செயற்பாட்டை திறம்பட மேற்கொள்ள இதுவரை தங்களால் பாதுகாக்கப்பட்டு வந்த பாரம்பரியம் மிக்க பாவனைப் பொருட்கள், அணிகலன்கள், ஏட்டுச் சுவடிகள். புராதன நூல்கள் என்பவற்றை யாழ்ப் பாண மாட்ட செயலகத்தின் ஆவணக்காட்சிப் பெட்டகத்திற்கு இலவச மாக வழங்கி உதவுமாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ. சிவபாலசுந்தரன் அறிவித்துள்ளார். அத்துடன் பாரம் பரியப் பொருட்களை வழங்கியவர்கள் தொடர்பான விபரங்கள் ஆவணப்படுத்தப்படும் என்பதையும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தான மஹோற்சவம் எதிர்வரும் 6 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 22 நாட்கள் இடம் பெறவுள்ள உற்சவத்தில் 18 ஆம் திருவிழாவான தேர்த் திருவிழா இம்மாதம் 23 ஆம் திகதி சனிக்கிழமை, மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் 25 ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (நி-5-6)

## 'திருவுடையாள்- 9' இதழுக்கான ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச பண்பாட்டுப் பேரவையினால் வெளியீடு செய்யப்படும் பிரதேச மலரான 'திருவுடையாள்-9'இற்கான கட்டுரைகள் கோரப்படுகின்றன.

இக் கட்டுரைகள் வடமராட்சிப் பிரதேசத்தின் கலை, கலாசாரம், சமூகம் வரலாறு, தொல்லியம், பொருளாதாரம் விவசாயம் சார்ந்த விடயங்களாக இருப்பதுடன் கட்டுரைகள் யாவும் A4 தாளில் பாமினி Font இல் 12 அளவில் தட்டச்சு செய்யப்பட்டு வன்பிரதியாகவும் மென்பிரதியாகவும் ஏப்ரல் 5 ஆம் திகதிக்கு முன்னராக பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ ஒப்படைக்க வேண்டும்.

தாமதமாக கிடைக்கப்பெறும் கட்டுரைகள் யாவும் நிராகரிக்கபடும் என்பதுடன் தெரிவுக்குழுவினால் தரமான கட்டுரைகளாக தெரிவு செய்யப்படும் கட்டுரைகள் மட்டுமே "திருவுடையாள் பிரதேச மலர்-9" இல் பிரசுரிக்கப்படும் எனவும் பிரதேச செயலாளரும் கலாசார பேரவைத் தலைவருமான ஈ. தயாரூபன் தெரிவித்துள்ளார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 14
உயரம்: -5'9"
தகைமை/தொழில்: A/L (ஆசிரியர்)
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/14032

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 16
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L (கனடா)
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/14036

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம் : மிருகசீரிடம்
கி.பா:
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: படவரைஞர்
எதிர்பார்ப்பு : உத்தியோகம், வெளிநாடு
தொ.இ: B/14038

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம் : உத்திரட்டாதி
கி.பா: 71
உயரம்: 5'6"
தகைமை/ தொழில்: BA (Teacher)
எதிர்பார்ப்பு: அரச தொழில்
தொ.இ: B/14040

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 28
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BSC (Hons) QA(PVT)
எதிர்பார்ப்பு: Engineer, Accountant
தொ.இ: G/14057

பிறப்பு: 1999 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 62 உயரம்: 162Cm
தகைமை/தொழில்: BSC(Hons) IT Final Year
எதிர்பார்ப்பு: IT தொடர்பானவர்
தொ.இ:G/14060

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: -
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Bsc,(Electrical Engineer
எதிர்பார்ப்பு: Engineer, Banker, IT
தொ.இ:G/14062

பிறப்பு: 1998 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 19 3/4 சூரிய செவ் 12ல்
உயரம்: -5'3"
தகைமை/தொழில்: Bsc(Food production Technology)
எதிர்பார்ப்பு: வெளிநாடு (லண்டன், கனடா)
தொ.இ:G/14006

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



# நின் சேவை நயப்பில்...

செல்வி.மங்களவதனி மகாதேவா(SLTAS-II)

(ஆசிரிய ஆலோசகர், மனைப்பொருளியல்)





ஆசிரியராய், ஆலோசகராய் முப்பத்தைந்து ஆண்டுகள் நிறைவான நின் சேவைக்கும் மகிழ்வான ஓய்வுக்கும் மனதார வாழ்த்துகின்றோம்

சேவை விபரம்:

17.08.1988-02.02.1991
யா/வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம்
03.02.1991-31.12.1992
யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி
01.01.1993-31.12.2000
யா/வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம்
01.01.2001-10.01.2012
யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி
11.01.2012-03.03.2024
யாழ்ப்பாணம் கல்வி வலயம்.

வாழ்த்துவோர்: யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலக நலன்புரிச்சங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்

சங்குநாதம்

நாதம் 430

Viber 076 636 3378



# கைது முதல் இறப்பு வரை; சாந்தன் கடந்து வந்த பாதை



முப்பத்து மூன்று ஆண்டுகளாய் தன் அன்பு மகனைப் பார்க்க ஏங்கித் தவித்த ஓர் அபலைத்தாயின் ஏக்கமும் வேண்டுதலும் பொய்த்துப் போய்விட்டது.

சாந்தன் மரணித்தார் என்ற செய்தி உலகையே சோக இழைக்குள் தள்ளிவிட்டது. 1991 ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தி கொலைவழக்கில் கைது செய்யப்பட்டு இற்றைக்கு முப்பத்து மூன்று ஆண்டுகள் நான்கு சுவருக்குள் அடைக்கப்பட்டுக் கிடந்து விடுதலைக் காற்றைச் சுவாசித்து வெறும் ஒரு வருடம் கடந்த நிலையில் சாந்தன் உடல்நலக்குறைவால் மரணித்துப் போனார்.

பாதைமாறிய கன்றை அம்மா எனும் குரலினால் தன்னுடன் அழைக்கும் தாய்ப்பசு. ஆனால் முப்பத்து மூன்று ஆண்டுகள் ஒரு தாயின் மகனே! மகனே! என்ற கண்ணீர்க் குரல் எவர் காதுகளிலும் வீழாது போனதை நினைக்கும் போது நெஞ்சம் வெம்மி வெடிக்கிறது.

எந்தத் தாய்க்கும் ஏற்படக்கூடாத மிகப்பெரும் துயரத்தை சாந்தனின் தாயார் அனுபவித்துக் கொண்டிருக்கிறார். தான் பெற்ற பிள்ளையை அள்ளி எடுத்து அவன் தலை கோதி நெற்றியில் அன்பு முத்தம் இட்டு அவனைக் கட்டியணைக்க காத்திருந்த தாய்க்கு சாந்தனின் உயிரற்ற உடலைக் காட்டியிருக்கிறது இந்திய-இலங்கை அரசுகள்.

தூக்கு தண்டனையிலும் மிகப்பெரும் தண்டனையை கடந்த முப்பத்து மூன்று ஆண்டுகள் அனுபவித்து, தான் வாழ்ந்த மண்ணை தரிசிக்கவும் தன் உறவுகளைக் கண்டு மகிழவும் தன் சுதந்திரத்தை முழுவதுமாய் உணர்ந்து கொள்ளவும் ஆசைப்பட்ட சாந்தனின் அத்தனை ஆசைகளும் நிராசையாகிப்போக, காற்றோடு காற்றாய் கலந்து போனது சாந்தனின் உயிர்.

தன் ஆசை மகனை இறுதிவரை உயிருடன் பார்த்திடாத அந்த அபலைத்தாயின் கேள்விக்கு யார் பதில் சொல்வார்.

விசாரணைக்காலம், தூக்குத்தண்டனைக் கைதி, ஆயுள் தண்டனைக் கைதி என பல சட்டப் போராட்டங்களைச் சந்தித்து தனது விடுதலையை தன் தாய்மடியில் தூங்குவதனூடாக களிக்க விரும்பிய ஓர் உயிருக்கு இரண்டு அரசுகளும் கொடுத்த விலை என்ன?

மடிந்துபோன சாந்தன் இனி மீண்டும் வரப்போவதில்லை. ஆனால் தன்மகனைக் காணவேண்டும் என்ற அந்த ஏழைத்தாயின் ஏக்கங்களும் கனவுகளும் நிச்சயம் சம்பந்தப்பட்டவர்களை சாபமாய்த் துரத்திக் கொண்டே இருக்கும். இது நிச்சயம்.

**அபிமன்யு**

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி வழக்கில் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் சாந்தன். ராஜீவ்காந்தி கொலை வழக்கில் அனைவரும்விடுதலை செய்யப்பட்டிருந்த நிலையில், சாந்தனும் விடுதலை பெற்றிருந்தார். தொடர்ந்து அவர் உடல் நலக்குறைவு காரணமாக சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 28 ஆம் திகதி உயிரிழந்துள்ளார். வடமராட்சி உடுப்பிட்டியைப் பூர்வீகமாகக் கொண்ட சாந்தன், முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு கிட்டத்தட்ட 30 வருடம் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். கடந்த 2022 ஆம் ஆண்டு இந்திய உச்சநீதிமன்றம் 7 பேரையும் விடுதலை செய்திருந்தது.

சாந்தன் இலங்கையைச்சேர்ந்தவர் என்பதால் திருச்சி மத்திய சிறையில் உள்ள அகதிகள் சிறப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டிருந்தார். அகதிகள் முகாமில் சிறப்பு வசதிகள் ஏதுமில்லை, நடைப்பயிற்சி செய்ய முடியவில்லை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளை சாந்தன் தரப்பு தெரிவித்திருந்தது. இந்த நிலையில் அவர் தற்போது உடல்நலக் கோளாறு காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தது உலகளவில் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

1991 மே 21 ஸ்ரீபெரும்புதூரில் நிகழ்ந்த ராஜீவ் காந்தி கொலை சம்பவத்தில் ஒவ்வொருவராக கைது செய்யப்பட்ட நிலையில் 1991 ஜூலை 22 ஆம் திகதி சாந்தன் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட 26 பேரிடமும் தொடர்ந்து விசாரணை நடைபெற்றுவந்த நிலையில், 1998 ஜனவரி 28 ஆம் திகதி, 26 பேருக்கும் தூக்கு தண்டனை வழங்கியது பூந்தமல்லி தடா நீதிமன்றம்.

அதனைத் தொடர்ந்து 1999 ஆம் ஆண்டு மே 11 திகதி 26 பேரில் 19 பேர் விடுவிக்கப்பட்டனர். ஆனால் நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய நான்கு பேருக்கு தூக்கு உறுதி செய்யப்பட்டது. 1999 ஒக்டோபர் 8 ஆம் திகதி தூக்கு தண்டனையை குறைக்கக் கோரிய சீராய்வு மனு தள்ளுபடி செய்யப்பட்டது. 1999 ஒக்டோபர் 10 ஆம் திகதி நால்வரும் ஆளுநருக்கு கருணை மனு அனுப்பினர். 1999 ஒக்டோபர் 29 ஆம் திகதி அப்போதைய ஆளுநர் பாத்திமா பீவி கருணை மனுக்களை தள்ளுபடி செய்தார்.

1999 நவம்பர் 25 ஆம் திகதி ஆளுநரின் உத்தரவை ரத்து செய்து அமைச்சரவை முடிவு மீது ஆளுநர் முடிவெடுக்க வேண்டும் என்று உத்தரவு கொடுக்கப்பட்டது. 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் 24ஆம் திகதி நளினியின் தூக்கு தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. ஆனால்பேறறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரின் தூக்கு தண்டனை ரத்து செய்யப்படவில்லை.

அதனைத் தொடர்ந்து குடியரசுத் தலைவராக இருந்த பிரதீபா பாட்டீல் 2011 ஆகஸ்ட் 12 ஆம் திகதி கருணை மனுக்களை தள்ளுபடி செய்து அறிவிப்பு வெளியிட்டார். அதன் விளைவாக தமிழ் நாட்டில் அதனைக் கண்டித்து பல்வேறு போராட்டங்கள் நடந்தது.

பின்னர் தூக்கு தண்டனை அளிக்கப்பட்ட மூவரும் சேர்ந்து, தாங்கள் அதிக வருடங்கள் சிறையில் கழித்துவிட்டோம் என்று தூக்கு தண்டனையை ரத்து செய்ய உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். இதில் 2014 பெப்ரவரி 18ஆம் திகதி பேரறிவாளன், சாந்தன், முருகன் உள்ளிட்ட மூன்று பேரின் தூக்கு தண்டனையை ரத்து செய்து சதாசிவம் தலைமையிலான மூன்று நீதிபதிகள் அமர்வு தீர்ப்பளித்தது.

2014 பெப்ரவரி 19ஆம் திகதி ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிக்கிய கைதிகள் விடுதலை என ஜெயலலிதா அறிவித்திருந்தார். குற்றவியல் நடைமுறைச் சட்டப்படி சிபிஐ விசாரித்த வழக்குகளில் எடுக்கும் முடிவை மத்திய அரசுக்கு தெரியப்படுத்த வேண்டுமென்று கூறி, மத்திய அரசுக்கு தெரிவித்த போது அப்போது இருந்த காங்கிரஸ் அரசு உச்ச நீதிமன்றத்தை நாடி விடுதலைக்குத் தடைபெற்றது. பின்னர் நடைபெற்ற அந்த வழக்கில், 2015 டிசெம்பர் 2 மத்திய அரசின் ஒப்புதல் இல்லாமல் அவர்களை விடுவிக்க முடியாது என நீதிபதி இப்ராஹீம் கலிபுல்லா அமர்வு தீர்ப்பளித்தது.

2016 மார்ச்2 ஆம்திகதி பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு பேரை விடுவிக்கக் கோரி மத்திய அரசுக்கு தமிழக அரசு கடிதம் எழுதியிருந்தது. 2018 மார்ச் 7 பேரை விடுவிப்பு தொடர்பாக ஆளு நர் முடிவெடுக்கலாம் என ரஞ் சன் கோகாய் அமர்வு தீர்ப்பளித்தது. 2018 டிசெம்பர் 6ஆம் திகதி 161 சட்ட விதிப்படி ஆளுநர் இறுதி முடிவு எடுக்க உச்சநீதிமன்றம் அதிகாரம் வழங்கியது.


அதனைத் தொடர்ந்து பேரறிவாளன் இந்த வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்ட நிலையில் சாந்தன், முருகன், ராபர்ட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகியோர் 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டனர். இருப்பினும் அவர்களில் பேரறிவாளனைத் தவிர மற்றவர்கள் இலங்கையைச்சேர்ந்தவர்கள். அதனால் அவர்கள் திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டிருந்தனர்.

வரலாற்றில் இடம்பிடித்த துயரசம்பவமான ராஜீவ் கொலை வழக்கில், கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட 7 பேரில், சாந்தன் சொந்த நாடு திரும்பாமலேயே உயிரிழந்துள்ளார்.

**-நக்கீரன்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



யாழ்.பல்கலைக்கழகப் பொன்விழா நுழைவாயில் வளைவு அமையட்டும்

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.விடுதலை பெற்ற சாந்தன் தன் தாய் மண்ணுக்கு வருவார் என எல்லோரும் எதிர்பார்த்திருந்த வேளை, அவர் சென்னையில் காலமான செய்தியறிந்து மிகுந்த வேதனையடைகின்றோம்.

தன் மகனை ஒரு முறையேனும் உயிரோடு பார்த்துவிட வேண்டும் என்ற அந்தத் தாயின் ஆசை நிறைவேறாமல் போனமை அத்தனை மனித உள்ளங்களையும் வேதனைப்படுத்தியுள்ளது.

சாந்தனின் ஆத்மா சாந்தியடைய நாம் அனைவரும் இறைவனைப் பிரார்த்திப்போமாக. அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

விதானையார்:- சாவகச்சேரி மீசாலையில் நேற்று முன்தினம் (01) இடம்பெற்ற விபத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன் சிவநாவலன் பரணிதரன் உயிரிழந்த சம்பவம் யாழ்ப்பாணத்தில் மிகுந்த வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வண்டி வேகமாகச் செலுத்தப்பட்டதன் காரணமாக இந்த விபத்து இடம்பெற்றதாகத் தெரியவருகிறது.

எனவே வட பிராந்தியப் போக்குவரத்து பஸ்சாரதிகள் பஸ்ஸை குறிப்பிட்ட வேகத்தில் செலுத்துவதற்கான உரிய ஏற்பாடுகளை குறித்த நிர்வாகம் செய்ய வேண்டும்.

பஸ்ஸை வேகமாக ஓட்டும் போது, அது குறித்து போக்குவரத்து சபைக்கு பயணிகள் அறிவிக்கக் கூடிய வகையில் தொலைபேசி இலக்கங்களை பஸ்ஸின் உள்ளும் புறமும் காட்சிப்படுத்த வேண்டும்.

இதனைச் செய்வதன் மூலம் பயணிகள் உரிய தகவல்களை வழங்கக் கூடியதாக இருப்பதுடன் வீதியால் பயணிக்கின்ற ஏனையவர்களும் குறித்த பஸ் எந்த இடத்தில் வேகமாகப் பயணித்தது. எந்த இடத்தில் சாரதி தொலைபேசி கதைத்தவாறு பஸ்ஸை ஓட்டினார் என்ற தகவல்களையும் தெரியப்படுத்த முடியும்.

கங்காணி:- வட பகுதியில நடக்கிற விபத்தில தனித்து சி.ரி.பி பஸ் மட்டும் என்றில்லை, தனியார் பஸ் வண்டிகளும் டிப்பர் வாகனங்களும் அடிக்கடி விபத்துக்களை ஏற்படுத்துகின்றன.

தனியார் பஸ் சேவையைப் பொறுத்தவரை அவர்களுக்கென தனியான சங்கங்கள் உள்ளன. எனவே வேகமாக ஓடுகின்ற சாரதிகள் மீதும் பஸ் வண்டியின் உரிமையாளர்கள் மீதும் தனியார் ஊர்திச் சங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தவிர விபத்துக்களை ஏற்படுத்துகின்ற பஸ் வண்டிகளின் சேவை ரத்துச் செய்யப்படும். பதிவுகள் நீக்கப்படும் என்ற இறுக்கமான விதி முறைகளை தனியார் ஊர்திச் சங்கம் அமுலாக்கவேணும்.

மூப்பர்:- அதெண்டால் உண்மை தான். பெரும்பில தனியார் பஸ் வண்டிகள் யாழ்ப்பாணத்தில இருந்து புறப்படும் போது, உருட்டிக் கொண்டு தான் போவினம்.

பிறகு முகமாலையில வைத்து கொற இழுவை.

அதோட அந்த பஸ் சாரதிகளும் கையடக்க தொலைபேசியில கதைத்தபடி ஓடுகிறவேலையைச் செய்கினம்.எனவே அது தொடர்பிலும் பயணிகள் முறைப்பாடு செய்வதற்காக, சங்கத்தின் தொலைபேசி இலக்கங்களை பஸ் வண்டிகளில காட்சிப்படுத்த தனியார் பஸ் சங்கங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு மூப்பர் கூறியதும் ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து மேற்படி இரண்டு தீர்மானங்களையும் ஏகமனதாக நிறைவேற்றினர்.

அதனைத் தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க சாத்திரியார் சதாசிவம் குரல் கொடுத்தார்.

சாத்திரியார்:- அது சரி, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின்ர நுழைவாயிலில இரண்டு பெரிய நந்திகளை வைப்பதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிந்தம்.

அந்தத் தகவல் மிக்க மகிழ்ச்சியினைத் தருகின்றது. இந்த இடத்தில் யாழ் பல்கலைக்கழக நுழைவாயிலின் இரு மருங்கிலும் ஏலவே இருந்த நந்திகளைப்போல இரண்டு நந்திகளை நுழைவாயிலின் தூண்களில் வைக்க வேண்டும் என பலரும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அந்தக் கோரிக்கையை ஏற்று நல்ல முறையில நந்திகளை வடிவமைத்து அதனை நுழைவாயிலில வைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ள யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா அவர்களுக்கு ஆலடி மாநாடு தனது நன்றியினையும் வாழ்த்துக்களையும் தெரி வித்துக் கொள்கின்றது எனக்கூற, அனைவரும் எழுந்து நின்று துணைவேந்தருக்கு தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.தொடர்ந்து வாத்தியார் வைத்திலிங்கம் எழுந்தார்.

வாத்தியார்:- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு 2024 ஆம் ஆண்டில வருகுது.1974 இல் ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இந்த ஆண்டு தனது பொன் விழாவைக் கொண்டாடும் போது; யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், திருநெல்வேலி பரமேஸ்வராக்கல்லூரி, பல்கலைக்கழக வளாகத்தில் வீற்றிருக்கும் பார்வதி பரமேஸ்வரப் பெருமானின் கோயில், சேர். பொன். இராமநாதன் பிரபு, அவரின் பாரியார் சீமாட்டி லீலாவதி அம்மையார் உள்ளிட்ட வரலாறுகளை பொன்விழா மலரில் பொறித்து வெளியிட வேண்டும்.

அதோட அந்த வரலாற்றை எழுதக் கூடிய அறிஞர் குழாத்தை நியமிப்பதுடன், அந்த வரலாற்றை ஏதோவொரு வகையில் பொது மக்களின் பார்வைக்குத் தெரியப்படுத்தி அதில் சேர்க்கப்பட வேண்டிய வரலாறுகளையும் பெற்று அவற்றையும் உள்ளீர்த்த பின்னர் மலரை அச்சிட வேண்டும்.

பண்டிதர்:- வாத்தியார் சொல்லுறது நூறு வீதம் உண்மை. பரமேஸ்வராக் கல்லூரி, அங்கு கடமையாற்றிய அதிபர்களின் ஆளுமை, அங்கு நடைபெற்ற தமிழ் விழாக்கள், சைவப் பண்பாட்டு நிகழ்வுகள், திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரிக்கும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரிக்கும் உள்ள தொடர்பு, சேர். பொன். இராமநாதன் பிரபுவின் ஈகை, அவரின் மனைவி சீமாட்டி லீலாவதி அம்மையாரின் கல்விப்பணி, சிவப்பணி ஆகிய விடயங்களை அக்குவேறு ஆணிவேறாக அறிந்தவர்கள் தெரிந்தவர்கள் நம் மத்தியில் இன்னமும் இருக்கிறார்கள்.எனவே அவர்கள் அறிந்தவற்றை சேகரித்து அவற்றை ஒழுங்குபடுத்தி பொன் விழா மலரில் சேர்க்க வேண்டும். அப்போது தான் அது நிறைவான பொன்விழா மலராக இருக்கும்.

இதைவிடுத்து யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்தின் வரலாற்றை மட்டும் எழுத நினைத்தால், எதிர்காலத்தில இலங்கை அரசாங்கம் தான் யாழ்.பல்கலைக்கழகத்திற்குரிய காணியை அன்பளிப்புச் செய்தது என்பதாகக் கதை முடியும்.

வாத்தியார்:- யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்தின்ர பொன்விழா நிறைவில, பரமேஸ்வராச் சந்தியில ஒருபெரும் நுழைவாயில் வளைவை அமைக்க வேணும் என்பதுதான் என்ர விருப்பம்.


அந்த விருப்பத்தை பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் அல்லது சேர். பொன்.இராமநாதன் நம்பிக்கை நிதியம் செய்ய வேணும்.

அந்த நுழைவாயில்ல நடராசப்பெருமானின் திருவுருவம்,சேர்.பொன். இராமநாதன் பிரபுவின் சிலை, சீமாட்டி லீலாவதியின் சிலை, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் சிலை என்பன அமைக்கப்பட வேண்டும். இதுதான் பொன்விழாவின் மகுடமாக இருக்கும்.

இவ்வாறு வாத்தியார் கூற, அதனைத் தானும் ஏற்றுக் கொள்வது போல ஆலடிப்பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்றைய ரிக்ஷா வண்டிகள் இல்லாது போனதற்கு காரணம் என்ன வியாசரே?

**விஜயதரன் — உரும்பிராய்**

**இலங்கை- இந்திய மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு தான் என்ன வியாசரே?**

மீனவர் பிரச்சினை என்பது வெறும் எல்லை தாண்டல் மட்டுமல்ல. எமது தொப்புள் கொடி உறவில் விரிசல் எழும் பிரச்சினையும் இதுவே. எம்மையும் தமிழக மீனவர்களையும் எல்லை தாண்டிய மீன்பிடி என்கின்ற நேர்கோட்டில் வைத்து வெட்டும் செயலை அரசாங்கம் செய்கின்றது என்பதை முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

காலம் காலமாக ஒன்று கூடி குதூகலிக்கும் கச்சதீவு நிகழ்வை, வரலாற்றில் முதல் முறையாக தமிழகம் புறக்கணித்திருக்கிறது எனில் எமக்கிடையே இருக்கும் தூரத்தை கணித்து விடலாம்.

பேரின வாத அரச சக்திக்குள் நாம் சிக்கி விடாமல் எமக்குள் ஒரு புரிந்துணர்வுக்கு நாம் வர வேண்டும்.அதுவே நமக்கு நன்மை தர வல்லது.

**நமித்து — தெல்லிப்பழை**

**எல்லோரிடமும் நல்ல பெயரை வாங்க என்ன செய்ய வேண்டும் வியாசரே?**

அப்படி எனில் எமது பெயர் நல்ல பெயர் என்று இருந்தால் மட்டுமே அது சாத்தியப்படும்.

மனித மனம் என்பது வித்தியாசமானது. ஒருவருக்கு மிகப் பிடித்த ஒன்று மற்றவருக்கு கொஞ்சமும் பிடிக்காதிருக்கும்.

ஒருவருக்கு அழகாய் தெரியும் விடயம் இன்னொருவர் கண்ணுக்கு அசிங்கமாய் தெரியும். மனித மனம் என்பது இது தான்.

மற்றவரிடம் நாம் நல்ல பெயர் வாங்க வேண்டும் என்பதற்காக எமது சுயத்தை மாற்றிவிடக் கூடாது.

நாம் செல்லும் பாதை நேர் வழியாக இருக்க வேண்டும்.அப்படியாயின் எவர் எப்படிச் சென்றால் என்ன நமது வேலையை நாம் பார்த்தால் போதும்.

நாய் குரைப்பதால் நிலவு பயப்படுமா என்ன?

**திகான் — வடமராட்சி**

**18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் இராணுவப் பயிற்சி எடுக்க வேண்டும் என்கிறது இஸ்ரேல் அரசு. இது தொடர்பில் ஈழத் தமிழினத்தின் பார்வையில்..?**

ஈழத் தமிழினத்தின் ஆயுதப் போராட்டத்தில் ஒரு அப்பாவி உயிர்கூட போகவில்லை. இஸ்ரேலின் கொடூர தாக்குதலில் பாலஸ்தீனம் மயான பூமியாகிக் கொண்டிருக்கிறது.

ஈழத் தமிழரிடம் அபகரிக்கப்பட்ட தன் நிலத்திற்காக போரிட்டது.

இஸ்ரேல் பாலஸ்தீனத்தின் நிலத்தை அபகரிக்க போரிடுகிறது.

ஈழத் தமிழினம் தன் மறுக்கப்பட்ட உரிமையை வென்றெடுக்க போரிட்டது. ஆனால் இஸ்ரேல் பாலஸ்தீனர்களின் உரிமைகளைப் பறித்தெடுக்க போரிடுகிறது.

ஈழத் தமிழினத்தின் போராட்டம் உண்மை, நேர்மை, தர்மம் என்பவற்றின் வழி நிற்கின்றது.

ஆனால் இஸ்ரேலியத்தின் போர்...?




**அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை 076 097 3126 என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**கண்ணன் — தொண்டைமனாறு**

**சாந்தனின் மரண செய்தி கேட்ட தமிழரின் மனநிலை என்ன வியாசரே?**

முப்பது வருடங்கள் தன் பிள்ளையின் வரவுக்காக காத்திருந்த ஓர் அபல தாயின் மனக்குமுறல் ஆயிரம் எரிமலை வெடிப்புக்களுக்கு மேலானது.

தான் வாழ்ந்த காலத்தில் முக்கால் வாசிக் காலத்தை தன் மகன் சிறையில் தவிக்கும் தவிப்பை நினைத்து வாழ்ந்த அந்த தாய்க்கு, தன் மகனின் விடுதலை, அவனை உச்சி முகர்ந்து முத்தமிட ஆவல் கொண்டு அவன் வரவுக்காய் காத்துக் கிடந்தது.


ஆனால் விதியோ சதியோ அந்த அன்புத் தாயின் மூன்று தசாப்தப் போராட்டம்,பிரார்த்தனை அத்தனையும் பொய்யாகி விட்டது. சாந்தன் இறந்த செய்தி உலகத்திற்கு விழுந்த சாட்டையடி.

**சுதன் — குப்பிழான்**

**மதுரை ஆதீனத்திற்கு இருக்கும் அக்கறை ஏனையவர்களுக்கு இல்லாது போனது ஏன்?**

தனி நாடு கேட்டு போராடி ஈழத் தமிழினம் பட்ட துன்பத்தை மீண்டும் ஒருமுறை அனுபவிக்க அவ்வினத்திடம் சக்தியில்லை.

சக்தியில்லை என்பதைவிட தமிழினத்தை வழிநடத்த நல்ல தலைவன் இல்லை என்று கூறிவிடலாமே.



சாந்தனின் மரண செய்தி கேட்ட தமிழரின் மனநிலை என்ன வியாசரே?

**டனுசாந்ராசா — திருநெல்வேலி**

**ஈழத் தமிழினத்திற்கு தனி நாடு வேண்டும் என இந்தியப் பிரதமர் மோடியிடம் மதுரை ஆதீனம் கோரிக்கை முன் வைத்துள்ளாரே?**

ஈழத் தமிழினத்தின் தனி நாடு கோரிய போரை முறியடிக்க வேண்டும் என சர்வதேசம் தீவிரமாக இருந்தது.

அதில் இந்தியா ஒன்றும் விதிவிலக்கல்ல. ஈழத் தமிழினத்திற்கு தனிநாடு கிடைத்தால், அதற்கு இந்தியா அனுசரணை வழங்கினால் மத்திய மாநில ஆட்சி நிலவும் இந்தியாவின் நிலை மோசமாகும் என்ற ஆழ்ந்த சிந்தனையும் இந்தியாவிடம் இருக்கவே செய்தது.

என்ன செய்வது. அது தான் ஈழத்தமிழினத்தின் போராட்டத்தை முள்ளிவாய்க்காலில் வைத்து துவம்சம் செய்து விட்டதே சர்வதேசம்.

**மதுவன் — மீசாலை**

**அன்றைய ரிக்ஷா வண்டிகள் இல்லாது போனதற்கு காரணம் என்ன வியாசரே?**

பழையன கழிதலும் புதியன புகுதலும் எனும் கொடுமையே எமது பழைமைகள் அத்தனையையும் வேரோடு அழித்து விட்டது.

இற்றைக்கு முப்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட வாழ்க்கை முறையையும் நாம் பயன்படுத்திய பொருட்களையும் தொல்பொருள் காட்சியகத்தில் பார்வையிடும் கொடுமை இருக்கிறதே அதை என்னவென்று கூறி விட முடியும்.

ஈழத்தமிழினத்தின் வீரம் மிக்க போராட்டமும் அப்படிப்பட்டது தான்.

அதை எமது இப்போதைய சந்ததிக்கு சரியாக கூறி வளர்த்திருப்போமாக இருந்தால் கஞ்சா, குடி,அபின் விற்பனையும் இருந்திருக்காது. வாள்வெட்டுக்களும் நடந்திருக்காது.

**சுரேசன் — பத்தமேனி**

**கவர்ச்சிகரமான உணவகங்களில் கூட தரம்,சுவை என்பவற்றில் மாறுபாடு இருக்கிறதே?**

நான்கு பக்கமும் கண்ணாடி அடைத்து நடுவில் ஒரு ஓட்டை விட்டு அதில் ஏசி பூட்டி நாறிய உணவுகளை குளிர்சாதனப் பெட்டிக்குள் அடைத்து நாறியதை புதிதாய் காட்ட சூடு ஏற்றி சுவையூட்டி சேர்த்து சோக்காய்க் கொடுக்க எலும்பை சூப்பி சூப்பி சாப்பிட்டுவிட்டு நான்கிற்கு பத்து மடங்கு காசு கொடுத்து சேவருக்கு ரிப்சும் கொடுத்துவிட்டு குச்சியால் பல் குத்திக் கொண்டு வீடு செல்வர் செல்வந்தர்.

இந்த நாற்றத்தைவிட தெருவோரக் கடைகள் பல தரம்,சுகாதாரம், சுவை என்பவற்றில் அதி உன்னதம் பேசுகின்றது.

புரிய வேண்டியவர்கள் புரிந்தால் சரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

படம்: குழந்தையும் தெய்வமும்
இயற்றியவர்: கவிஞர் வாலி
இசை: எம்.எஸ். விஸ்வநாதன்
பாடியவர்: பி. சுசீலா



குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று
குற்றங்களை மறந்து விடும் மனத்தால் ஒன்று
குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று
குற்றங்களை மறந்து விடும் மனத்தால் ஒன்று
நடந்ததெல்லாம் நினைப்பதெல்லாம் துயரம் என்று
ஞானிகளும் மேதைகளும் சொன்னார் அன்று
நடந்ததெல்லாம் நினைப்பதெல்லாம் துயரம் என்று
ஞானிகளும் மேதைகளும் சொன்னார் அன்று
குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று
குற்றங்களை மறந்து விடும் மனத்தால் ஒன்று

பிறந்து வந்த போது நெஞ்சம் திறந்திருந்தது
பிறந்து வந்த போது நெஞ்சம் திறந்திருந்தது – அந்தப்
பிள்ளையோடு தெய்வம் வந்த் குடியிருந்தது – அந்தப்
பிள்ளையோடு தெய்வம் வந்த் குடியிருந்தது
வயது வந்த போது நெஞ்சில் மயக்கம் வந்தது
வயது வந்த போது நெஞ்சில் மயக்கம் வந்தது – அங்கு
வாழ்ந்திருந்த தெய்வம் கொஞ்சம் விலகிச் சென்றது – அங்கு
வாழ்ந்திருந்த தெய்வம் கொஞ்சம் விலகிச் சென்றது

குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று
குற்றங்களை மறந்து விடும் மனத்தால் ஒன்று

உச்சி வெயில் சூரியனை மேகம் மூடுது
உச்சி வெயில் சூரியனை மேகம் மூடுது – நம்
உள்ளம் என்னும் சூரியனை கோபம் மூடுது – நம்
உள்ளம் என்னும் சூரியனை கோபம் மூடுது
காற்று வந்தால் மறுபடியும் மேகம் ஓடுது
காற்று வந்தால் மறுபடியும் மேகம் ஓடுது – பேசிக்
கலந்து விட்டால் கோபம் மாறி நேசமாகுது – பேசிக்
கலந்து விட்டால் கோபம் மாறி நேசமாகுது

குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று
குற்றங்களை மறந்து விடும் மனத்தால் ஒன்று

பிள்ளைகளாய் இருந்தவர் தான் பெரியவரானார்
பிள்ளைகளாய் இருந்தவர் தான் பெரியவரானார் – அந்தப்
பெரியவர்கள் கோபத்தினால் சிறியவரானார் – அந்தப்
பெரியவர்கள் கோபத்தினால் சிறியவரானார்
கள்ளமில்லா உள்ளத்தினால் பிள்ளைகளெல்லாம்
கள்ளமில்லா உள்ளத்தினால் பிள்ளைகளெல்லாம் – என்றும்
கண்ணெதிரே காணுகின்ற தெய்வங்களானார் – என்றும்
கண்ணெதிரே காணுகின்ற தெய்வங்களானார்

குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று
குற்றங்களை மறந்து விடும் மனத்தால் ஒன்று
நடந்ததெல்லாம் நினைப்பதெல்லாம் துயரம் என்று
ஞானிகளும் மேதைகளும் சொன்னார் அன்று
குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று
குற்றங்களை மறந்து விடும் மனத்தால் ஒன்று

# பாக்குநீரிணைக் கடந்த சாதனை வீரன் தன்வந்



தன்வந்தின் சாதனை முயற்சியைப் பாராட்ட கடந்த இரண்டு வாரத்திற்கு முன் திருகோண மலைக் கடற்கரையில் தன்வந்தின் பயிற்சியின் போது சந்தித்தேன். மாலையானால் கடற் கரைப்பக்கம் சிறுவர்களை அனுமதிக்காத சமூகத்தில் உள்ள எம் சிறுவன் தன்வந் இரவு 7.30 மணியளவில் வெகுதூரம் நீந்திச்சென்று கரைநோக்கித் திரும்பிக்கொண்டிருந்தான்.

அவனது பெருமுயற்சி வெற்றிபெறவேண்டும் என அவனை உற்சாகப்படுத்தி வாழ்த்தினேன்.

தன் கடின உழைப்பால் சாதித்து வருபவனை நாம் தூக்கிச் சுமப்பதும் அறிந்தவன், நண்பன், மாணவன், பிரதேசத்தவன், மாவட்டத்தைச் சேர்ந்தவன் எனக் கொண்டாடுவதை விட அந்தச் சாதனையினை நிகழ்த்த நாமும் ஏதோ ஒரு வகையில் பங்குகொண்டால் உரிமையுடன் பெருமை கொள்.

உலகில் நிமிடத்திற்கு நிமிடம் யாரோ ஒருவர் ஏதோ ஒரு விடயத்தில் சாதனை படைத்துக் கொண்டுதான் இருக்கின்றார்கள். அதனுடன் ஒப்பிடும் போது இலங்கையில் அதுவும் தமிழர்கள் வெகுதொலைவிலேயே உள்ளோம். நீந்திக் கடக்க வெகுதூரம் உண்டு. அந்த வகையில் 13 வயதுப் பையன் பாக்குநீரிணையினைக் கடந்து சாதனை படைப்பது என்பது நம்மைப் பொறுத்த வரை எண்ணிப் பார்க்காத விடயம்.

பாக்குநீரிணையினை இன்றைய நாள் வரை பல பேர் கடந்திருந்தாலும் மிகக்குறைந்த வயது உடைய சாதனையாளராக ஹரிகரன் தன்வந் இருப்பான் என்பது எமக்குப் பெருமை தான்.

ஏன் இந்த சாதனையினை நாம் ஊக்கப்படுத்த வேண்டும். என்ன முக்கியத்துவம் இதில் இருக்கின்றது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

யாதேனும் ஒருதுறையில் ஒரு சாதனை நிகழும் போது அச்சாதனை நிகழ்த்தியவரின் ஊர், மாவட்டம் ஏன் நாடு கூட அத்துறையினைத் திருப்பிப்பார்க்கும். அத்துறைசார்பான பெருவிழிப்புணர்வு ஏற்பட்டு பெருமாற்றம் நிகழும். அதற்கு பலஆயிரம் உதாரணங்களைக் காட்டமுடியும்.

அது மட்டுமல்லாமல் யார் என்ன விடயத்தில் விருப்புக்கொண்டிருக்கின்றார்களோ அத்துறையில் சாதிக்கும் ஒரு நேர்மறைச் சிந்தனையினையும் பரவச் செய்யும். இது சாதாரண மனித இயல்பு. அந்தவகையில் பல சிறுவர்கள் தன்வந்தைப் பின்தொடர்ந்து சாதனையினை நிலைநாட்ட முயற்சிக்கலாம் என்பது மிக முக்கிய மாகப் பார்க்கப்பட வேண்டிய விடயமாகும்.

நாம் கைதட்டிவிட்டு அல்லது ஒரு பதிவைப் போட்டுவிட்டுக் கடந்து சென்றிடலாம்.

ஆனால் அதற்குப்பின் இருக்கும் உழைப்பும் பொருட்செலவும் மிகப்பெரியது. எண்ணிப் பார்க்க முடியாதது. இன்று பொருளாதாரப் பிரச்சினையினை எதிர்கொண்டிருக்கும் நாட்டில் வாழும் ஒருவர் அதனையும் சேர்த்தே நீந்திக்கடக்க வேண்டும் என்பது இன்னொரு சுமை.

பாதுகாப்பான ஒரு குட்டையில் நீச்சல் பழகினால் போதும். அல்லது தண்ணியில் கண்டம் என அப்பக்கமே அனுப்பாத பெற்றோர்கள் மத்தியில் தன்வந்தைத் தயார்ப்படுத்தி அவனது சாதனைக்கு முழுமூச்சாய் செயற்பட்ட தாய், தந்தை மற்றும் நண்பர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.

**துஷ்யந்தன் கனா.** (முகநூலில் இருந்து)

# எமது சமூகம் மீண்டெழ வேண்டும்!

தமிழ் என்பது ஒரு மூச்சு. தமிழராய் நாம் பிறந்ததற்கு கொடுத்து வைத்தவர்கள். தமிழ் சமூகத்தின் பண்பாடு, கலாசாரம், பழக்க வழக்கம் என்பது உலகமே வியந்து பார்க்கும் அழவிற்கு உயர்ந்து நின்றது. ஆனால் இப்போது இவை எல்லாம் கேள்விக்குறியாகி பின்னோக்கி சென்றதற்கு பல்வேறு காரணம் சொல்லலாம். ஆனாலும் அத்தகைய பொறுப்பை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். மற்றவர்களை நாம் காரணம் காட்டிக்கொண்டிருந்தால் யார்தான் எம் சமூகத்தின் உயர்விற்கு கரம் கொடுக்க முடியும். நாம்தான் விழித்தெழ வேண்டும், மனதளவில் விடுதலை பெற வேண்டும்.

இன்றைய எங்கள் சமூகம் பல்வேறு விதமான சவால்களை சந்தித்து வருவதை நாளாந்தம் நாம் காணக்கூடியதாக உள்ளது. பல வருடங்களுக்கு முன்பாக கல்வியில் உயர் நிலை என்ற பெயரை கொண்டிருந்த எமது தேசம் இன்று போதைப்பொருள், சிறுவயது திருமணம், பாலியல் துஸ்பிரயோகங்கள், தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்து கொள்ளும் நிலை என அனைத்திலும் உயர்ந்து நிற்கின்றது. எமது சிறுவர்கள், இளைஞர்கள் தடுமாறிச்செல்வதற்கும், தடம்மாறிச்செல்வதற்கும் யார்தான் காரணமாக இருந்து விடுகிறார்கள் என்பதனை ஆய்வு செய்து கண்டடைறிவதை விட எமது மனநிலையில் எமது சமூகம் மீதான பற்றை கொண்டிருக்க வேண்டும்.

ஒரு முறை சோக்ரட்டீஸிடம் ஒருவன் சென்று அறிவை பெருக்கிக்கொள்ள என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டான். அப்போது சோக்ரட்டீஸ் அறிவை வளர்க்க என்னால் எதுவும் தர முடியாது. அதற்கான வழியை காட்ட முடியும் என்று ஒரு கடற்கரைக்கு அழைத்துச் சென்றார். அப்போது ஆழமான பகுதியில் அவனை அழைத்து, தள்ளி விட்டு நீந்திக்கொள் என்று சொன்னார் சோக்ரட்டீஸ். அந்த மாண வனும் மூச்சுமுட்டி, களைத்து கையை அடித்து கால் எட்டக்கூடிய இடத்திற்கு வந்து சோக்ரட் டீஸை உற்றுப் பார்த்தான். அதற்கு சோக்ரட்டீஸ் இப்போது உனக்கு என்ன தேவைப்படுகிறது? என்று கேட்க, சுவாசிக்க காற்று தேவை என்று அவன் கூறினான். சோக்ரட்டீஸ் உயிரை காப்பாற்றுவதற்காக எவ்வாறு அதிகமான முயற்சியை மேற் கொண்டாயோ, அதே போன்று அறிவை அதிகரித்துக் கொள்ளவும், உன் தற்போதைய நிலமையில் இருந்து உயர்ந்த இடத்தை அடையவும் கடுமையாக உழைக்க வேண்டும் என்றார்.

இந்த கதை ஒரு சிறிய கதையாக இருந்தாலும் இப்போதைய எங்கள் சமகால சூழலில் ஒவ்வொரு தனிமனிதனும், தனிமனித உயர்விற்காகவும், சமூகத்தின் உயர்விற்காகவும், அன்பு நிறைந்த வாழ்விற்காகவும் முழு ஈடுபாட்டுடன் உழைக்க வேண்டும். அப்போதுதான் எங்களையும் எங்களை சார்ந்துள்ள தமிழ் சமூகத்திற்கும் வேண்டிய கடமையை ஆற்ற முடியும். நானும் என்னுடைய வாழ்வும் என்பதை கடந்து எமது சமூகம் எதிர்கொள்ளும் சவால்களிலிருந்து மீண்டெழ நாம் இணைந்து பயணிப்போம்.

**பத்மசேனன் சனோசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மூன்றாம் ஆண்டில் ரஷ்யா - உக்ரைன் போர்!

பெப்ரவரி 24, 2022 அன்று தொடங்கிய ரஷ்யா - உக்ரைன் போர், இரண்டு ஆண்டுகளைக் கடந்து மூன்றாம் ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கிறது.

'உக்ரைன், நேட்டோ நாடுகளின் கூட்டமைப்பில் சேர நினைக்கிறது. இது எங்கள் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்' எனச் சொல்லி உக்ரைன் மீதான போரைத் தொடங்கினார் ரஷ்ய ஜனாதிபதி புடின். அப்போது, '10 நாட்களில் உக்ரைன் தலைநகர் கீவைக் கைப்பற்றி விடுவோம்' எனச் சவால் விட்டார் புடின். ஆனால், இரண்டு ஆண்டுகள் கடந்தும் ரஷ்யாவால் சொன்னதைச் செய்ய முடியவில்லை. அமெரிக்கா, பிரான்ஸ் உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகளின் உதவிகளோடு உக்ரைனும் பதிலடி கொடுப்பதால், இந்தப் போர் ஓயாமல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஐ.நாவின் அறிக்கைப்படி, கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்தப் போரால் மாண்டவர்களின் எண்ணிக்கை 30,457. அதோடு, வீடுகளை இழந்து, சுமார் 10 லட்சம் பேர் இடம் பெயர்ந்து வாழ்வதாகக் குறிப்பிடுகிறது ஐ.நா அறிக்கை. அவர்களில், 3.7 லட்சம் பேர் உக்ரைனிலேயே வேறு பகுதிகளுக்கு இடம்பெயர்ந்திருப்பதாகவும் மீதமுள்ள 6.3 லட்சம் பேர் வேறு நாடுகளில் அகதிகளாகத் தஞ்சமடைந்திருப்பதாகவும் ஐ.நா தெரிவிக்கிறது. உக்ரைனோ, 'ஐ.நா அறிக்கையிலிருப்பதை விடப் பல மடங்கு அதிகமானோர் மரணித்திருப்பார்கள்' என்கிறது.

உக்ரைன் மீதான போருக்கு எதிராக ரஷ்யாவில் போராட்டம் நடத்திய 19,855 ரஷ்யர்களை புடின் அரசு கைது செய்திருப்பதாகவும் தரவுகள் சொல்லப்படுகின்றன. இந்த நிலையில், மேற்கத்தேய நாடுகள் உக்ரைனுக்கு வழங்குவதாகச் சொன்ன ஆயுதங்களைப் பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது.

மேலும் அமெரிக்கா, உக்ரைனுக்கு வழங்குவதாகச் சொன்ன 60 பில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி கிடைப்பதிலும் சிக்கல் உண்டாகியிருக்கிறது. அமெரிக்காவில் பொதுத் தேர்தல் நடக்கவிருப்பதாலும் பணவீக்கம் அதிகரித்திருப்பதாலும் உக்ரைன் தனித்துவிடப்படும் சூழல் உருவாகியிருக்கிறது.

ஆனால், உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியோ, 'ரஷ்யாவை வீழ்த்தும் வரை போராடுவோம்' என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார். "இரண்டு ஆண்டுப் போரில், 31,000 உக்ரைன் வீரர்கள் மரணமடைந்திருக்கின்றனர். ஆனால் புடினோ, மூன்று லட்சம் வீரர்களைக் கொன்றதாகப் பொய் சொல்லி வருகிறார். அவர், 2030 வரை அதிகாரத்தில் இருக்க நினைக்கிறார். அது நடக்காது" என்கிறார் ஜெலன்ஸ்கி.


உக்ரைனைக் கைப்பற்றும் வரை இந்தப் போரை நிறுத்த, புடின் தயாராக இல்லை என்பது அவரது நடவடிக்கைகளிலேயே தெரிகிறது. ரஷ்யா - உக்ரைன் போர் முடிவுக்கு வர வேண்டும் என்பதே உலக மக்களின் விருப்பமாக இருக்கிறது. ஆனால், அந்த விருப்பம் நிறைவேறுவதற்கான எந்த அறிகுறியும் இப்போதைக்கு இல்லை என்பதுதான் சோகம்.

# நின்று போன இதயம்.. மருத்துவக் கணிப்பை தாண்டி உயிர்பெற்ற நபர்!

**மருத்துவத் துறையில் கணிக்க முடியாத பல நிகழ்வுகள் நடக்கும். அந்த வகையில் 50 நிமிடங்கள் வரை இதயத்துடிப்பு நின்று போன ஒருவர் மீண்டும் உயிர்பெற்ற சம்பவம் பலரையும் வியக்க வைத்துள்ளது.**

இங்கிலாந்தைச் சேர்ந்த பென் வில்சனுக்கு 31 வயதாகிறது. கடந்த ஜூன் மாதம் வீட்டில் இருந்த பென் வில்சன் இதயம் வலிக்கிறது என்று கூறியபடியே தன் பார்ட்னர் ரெபெக்கா ஹோம்ஸ் மீது சாய்ந்துவிட்டார்.

உடனடியாக மருத்துவ உதவிக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அதேசமயம் சுயநினைவின்றிக் கிடந்தவருக்கு CPR வழங்கத் தொடங்கி இருக்கிறார் ரெபெக்கா. அங்கு விரைந்த அவசர மருத்துவக்குழு பல முயற்சிகளை மேற்கொண்டாலும் குடும்பத்தினரிடம் இழப்புக்குத் தயாராக இருக்கும்படி கூறியுள்ளனர்.



அவரின் இதயம் 50 நிமிடங்களுக்கு இடையில் இரண்டு முறை மட்டுமே துடித்துள்ளது. அவருக்கு 17 முறை டீஃப்ரிலேட்டர் மூலமாக எலெக்ட்ரிக் கரன்ட் செலுத்தப்பட்டது.

மருத்துவ ரீதியாக மாரடைப்பு காரணமாக இதயத்துடிப்பு நின்றுவிட்டதாகக் கூறப்பட்டாலும் கணிப்பைத் தாண்டி அவர் அதிலிருந்து மீண்டார். அறுவைசிகிச்சைக்குப் பின், மூளையை ஆக்ஸிஜன் பற்றாக்குறையிலிருந்து பாதுகாக்க ஐந்து வாரங்கள் மருத்துவ ரீதியாக தூண்டப்பட்ட கோமாவில் வைத்தனர். அதிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் படிப்படியாக நடக்கவும் பேசவும் செய்தார்.

தன் காதலி ரெபெக்கா ஹோம்ஸிடம் குறைந்த அளவு பேசுகிறார். இருந்தபோதிலும் குறுகிய கால நினைவாற்றல் பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்.

இது குறித்து ரெபெக்கா ஹோம்ஸ் கூறுகையில், "பாராமெடிக்கல்ஸ் நிபுணர்கள் வந்தபோது, நிலைமை மோசமாக இருக்கிறது என்று சொன்னார்கள். அவர்கள் இதயத் துடிப்பை மீட்டெடுப்பதற்கு முன்பு 40 நிமிடங்களுக்குள் 11 முறை டீஃப்ரிலேட்டரை பயன்படுத்தி இதயத்தை அதிர்வுறச் செய்தனர்.

அவரைத் தோட்டத்திற்கு வெளியே அழைத்துச் சென்று, பத்து நிமிடங்களில் ஆறு முறை அதிர்ச்சிக்குள்ளாக்கி மீண்டும் அழைத்து வந்தனர். உடனடியாக வேறெந்த சேதமும் ஏற்படாமல் இருக்க அவர்கள் அவரை மருத்துவ ரீதியாக தூண்டப்பட்ட கோமாவில் வைத்தனர்" என்று கூறினார்.

இப்போது குணமடைந்து வீட்டிற்குத் திரும்பிய பென் வில்சன் தனது திருமணத்தைத் திட்டமிட்டு வருகிறார். இவரின் கதை பலருக்கும் உதாரணமாக அமைந்துள்ளது. அதோடு மோசமான சூழலில் விட்டுப் பிரிந்து விடாமல் சிகிச்சை முழுவதும் உடனிருந்து கவனித்துக் கொண்டதால் இவர்களின் காதலையும் பலரும் பாராட்டி வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# கவிதைக் கலசம்

## இயற்கையைப் பேணுவோம்

இயற்கை அன்னையால் இனிமை கண்டோம்
வனத்துப் பொறியியலாய் மண்ணில் மலர்களின்
மகரந்தக் காதலுக்கு பூபாலரீங்கார மிசைத்து
தேனீக்கள் சேர்க்கையில் பூத்தன காய்த்தன
நம்தோட்ட மரங்களும் கனியுகமாகியது
செயற்கைச் செயற்பாடுகளினால்
முகாரி ராகத்தில் குறைப் பிரசவங்களாய்
சார்ந்து வாழ்ந்த மானுடம் சரிந்து போகிறது!
புரிந்துணர்ந்து இயற்கையை போற்றுவோம் இனமுறுகலின்றி

தமிழினியன் பரந்தாமன்,
வவுனியா.

## உண்மையற்ற தேசம்



அன்பும் தர்மமும்
நீதியும் நியாயமும்
இல்லாமல் செய்யப்பட்டு
புத்தனின் புனிதம்
புதைக்கப்பட்ட
இந்த பூமியில்
உண்மையற்ற
அரசியல் பிழைப்புக்காக
இனம், மதம் என்று
ஒர வஞ்சகமாக
கூறியதொரு
சாசனம் வரையப்படுவதோடு
கட்டுக்குள் அடங்கா
சுமைகளின் கோரப்பிடியில்
சுருண்டு போன

மக்கள் மனங்களில்
வலியையும் வேதனையையும்
விளைவித்து
வதம் செய்யும்
வஞ்சகரை
வதைத்திட யாருளரோ?
புத்தபிரானே
இது உனக்கான
சமர்ப்பணம்

தேன்நிலா

## பள்ளியின் நாட்கள்

என்னைக் கடந்து போகும்
வெறுமைக்கு வழிவிட்டு
மிதந்து நகரும்
இந்தப் பாடலிசைக்கு
நம் காதலின் சாயல் வாய்த்திருக்கிறது..


கொஞ்சம் உருமாறியிருக்கும்
வெறுமைக்கும் தனிமைக்கும்
இடைப்பட்ட வெளியொன்றில்
கற்பனைக்கென்று
கொஞ்சம் இடம் மீதமிருந்தது..

நமக்கிடையில்
இன்னுமோர் உலகத்தை
உருவாக்கிக்கொள்ள எத்தனிக்கும்
இந்தக் கற்பனைதான்
நான் தொலைத்துவிட்டதாய்
நினைத்துக்கொண்டிருந்த
சில வார்த்தைகளுக்கு
உருவம் கொடுத்துக்கொண்டிருக்கிறது..

தனிமைக்குள் புதைந்துகொண்டிருந்த
அத்தனை மௌனங்களும்
புன்னகைக்கின்றன.. அடர்ந்த மௌனம்
இசையென இசைகிறது..

சங்கரி சிவகணேசன்

## மௌனத்தின் தேடல்-705



## எல்லாம் நீதான்



சுவாசிக்க ஒக்சிசன் உண்பதற்கு உணவு
உடுப்பதற்கு உடை வசிப்பதற்கு வீடு
வீட்டுக்குத் தளபாடம் நோய்க்கு மருந்து
எரிப்பதற்கு விறகு மண்ணுக்கு உரம்
மழைக்கு நீதான் ஆதாரம் என்றறிந்தும்
வெட்டிச் சரிக்கும் வீணரைச் சுடுகாட்டில்
கட்டையில் வைத்து எரிப்பது நீதான்

பிரமனி, ஏரகக்இவில்.

## கோடரிக் காம்புகள்

இயற்கை அன்னை
படைத்திட்ட அதிசய மரங்கள்
இயற்கை வள மண்ணின் சொத்துக்கள்
மனிதனுக்கு உயிர்
கொடுத்து பசி தீர்த்திடும் மரங்கள்
மாநிலத்தில் பறவைகள்
வாழும் உறைவிடங்கள்
மரநிழலில் களையைப்
போக்கிடும் மானிடனே
மரத்தை தறித்திடல் நியாயமா?
வீட்டுக்கொரு மரம் நாட்டெனக் கூறி
வீதிகள் தோறும் மரம்
நாட்டி பசுமைப் புரட்சியை ஏற்படுத்திய நீ
கோடரிக்கு மரத்தால் காம்பு போட்டு
கோடரியால் மரத்தையே
தறித்து வீழ்த்திடும்
மாமனிதரே நீயும் செய்நன்றி மறந்து
மாநிலத்தில் கோடரிக் காம்பென்ற
பெயர் பெற்று
வாழ்ந்திட வேண்டுமா?

ஆ. செல்வி, திருநாவலூர்.

## இனி ஒரு விதி செய்வோம்

ஏய் மூட மானிடா
மரங்களின் பயன்கள்
எத்தனை எத்தனை
மனித பசி தீர்க்கும்
அட்சய பாத்திரமாய்
பிணி தீர்க்கும் ஔடதமாய்
மனித வாழ்வின் உறைவிடமாய்
பூமியை வெப்பத்தில் இருந்து
காக்கும் காவலனாய்
மழைவீழ்ச்சியாய் நல்ல குடிநீர்
தந்து தாகம் தீர்த்து
தன்னையே அழிப்பவனுக்கு
நிழல் கொடுத்து காக்கும்
மரங்களை வளர்ப்போம்
பயன் பெறுவோம் என
இனி ஒரு விதி செய்வோம்

இ.சிபவாழியான்,
உடுப்பிட்டி.

## மனசாட்சி எங்கே?

மனசாட்சி உள்ள மனிதர்களா
நீங்கள்? நீங்கள் அழித்துக்
கொண்டிருக்கும் மர நிழலில்
களைப்பாறுகிறீர்களே! களைப்பாறும்
மரத்தையே அழித்து விட முயலும்
நீங்கள் மட்டுமல்ல யாருமே
அனுபவிக்க முடியாது

அபிஇலம்ராவிகா, சித்தன்கேணி.

## மரம்

அடியோடு மரந்தனை தறித்து அதனடி
வேரில்நிறுத்தி விட்டு
அதன் நிழலில் அமர்ந்திருந்து
ஆசுவாசமாய் கதைகள்
பல பேசி உணவு
உண்டு களைப்பாறும் செயல்
ஓர் மனிதாபிமான பண்பு
நன்றியில்லாச் செயற்பாடே

சி.மகாலட்சுமி, கொக்குவில்.

## குளிர் நிழல்

மாந்தர் குறைக்கும் தனைக்கும்
குளிர்நிழலைத் தந்து
மறைக்கும் குடை என்றால்
மாதரசி ஔவை உன்னை

பி.மதுஷ்சனி, தையிட்டி.

## மௌனத்தின் தேடல்- 706



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை; வியாசர் பதில்களை ஆசிரியர் மௌனத்தின் தேடல், வலம்புரி- சங்குநாதம், இல.[illegible], பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை



02

செங்கை ஆழியான்

ஆனால், 1200 வீரர்களே தரையில் அணிவகுத்து நின்றால் திகைப்பு ஏற்படாது என்ன செய்யும்? கப்பித் தான்களும் பிரதான மாலுமிகளான ஒப்பேஸ்ருமன்களும் சேர்ந்து தத்தமது அடிமைகளினதும் உறவினர்களினதும் பெயர்களைப் படைவீரர் பதிவேட்டில் பதிந்து சம்பளம் எடுத்து ஏமாற்றி வந்திருப்பது புலனாகியது.

யாழ்ப்பாணக் கரையில் படையை இறக்கியாகி விட்டது. இனிச் சிந்தித்துப் பயனில்லை. நல்லூரை நோக்கி முன்னேறுமாறு பிரகன்சா கட்டளையிட்டான். பீரங்கிகள் குண்டுகளைத் தள்ளி வெடித்தன. துப்பாக்கிகள் சன்னங்களைப் பொழிந்தன. தமிழர் படை எவ்வளவு எதிர்த்ததும் போர்த்துக்கேயப் படை நல்லூரை நோக்கி முன்னேறுவதைத் தடுக்க முடியவில்லை. சங்கிலி செகராசசேகரன் ஈற்றில் கோப்பாய்க்குப் பின்வாங்கிவான். தலைநகருள் பிரவேசித்த பறங்கிப் படை நகரைச் சூறையாடியது.

பின்னர் சங்கிலி செகராசசேகரனுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு, ஏராளமான திரவியங்களுடன் கொன்ஸ்தாந்தீனு தே பிறகன்சா திரும்பிச் சென்றான். ஒப்பந்தப்படி மன்னாரில் போர்த்துக்கேயர் ஒரு கோட்டையைக் கட்டிக் கொண்டனர்.

சங்கிலி செகராசசேகரனுக்குப் பின் புவிராசபண்டாரம் காசி நயினார் அல்லது குஞ்சு நயினார் (1565), பெரிய பிள்ளை செகராசசேகரன் (1570), புவிராசபண்டாரம் (பரராசசேகரன்) (1582), எதிர்மன்னசிங்ககுமாரன் (1591) ஆகிய மன்னர்கள் யாழ்ப்பாணத்தின் ஆட்சியாளர்களாக விளங்கினர். யாழ்ப்பாண இராச்சியத்தில் நிகழ்ந்த உள்நாட்டுக் குழப்பத்தினாலும் போர்த்துக்கேயரின் அரசியல் தலையீட்டினாலும் இந்த மன்னர்கள் நிலையாகத் தொடர்ந்து ஆளமுடியாது போனது. புவிராச பண்டாரம் இரு தடவைகள் மன்னாரைத் தாக்கிப் போர்த்துக்கேயரைத் துரத்த முயன்றும் இயலாது போயிற்று.

1591, போர்த்துக்கேயரின் மூன்றாவது யாழ்ப்பாணப் படையெடுப்பு நிகழ்ந்தது. போர்த்துக்கேயப் படைத் தளபதி அந்திரே பூர்த்தாடு டி மென்டொன்ஸா 43 மரக்கலங்களுடனும் 250 வள்ளங்களுடனும் ஊர்காவற்றுறை யூடாக யாழ்ப்பாணக் கடனீரேரியுள் பிரவேசித்துள்ளான். அவனது படையில் 1400 பறங்கிகளும் 3000 லாஸ்கொறின் எனப்படும் சிங்களச் சுதேசிகளும் யுத்தத்திற்குத் தயாராகவுள்ளனர்.

பண்ணை நெருங்கியபோது, யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்கரையோரம் தெளிவாகத் தெரிந்தது. தென்கரையோரம் முழுவதும் ஒரே கட்டைக்காட்டு மரங்களினாலும் கண்ணா மரங்கள் நிறைந்த சதுப்பு நிலத் தாவரங்களினாலும் மூடப்பட்டிருந்தது. வானளாவி உயர்ந்து நின்றிருந்த பனை மரங்கள் காட்டின் வட விளிம்புகளில், சோளகக் காற்றுக்கு ஈடுகொடுத்து அசைந்தாடின. "எதிரியே வராதே. இது எங்கள் சுதந்திர பூமி" அக்காட்டுப் பரப்பிற்கு அப்பால் நாகரிகமான நல்லூர் நகரம் இருப்பதனை அவர்கள் அறிவார்கள். அக்காட்டு மரங்களுக்கிடையில் பண்ணைக் கரையில் முருகைக் கற்களாலும் களிமண்ணாலும் கட்டப்பட்டு பீலி ஒடுகளால் வேயப்பட்ட இரு சிறு கட்டடங்கள் இருப்பதை மொன்டொன்சா கண்டான்.

(தொடரும்...)

---

# கடல் புறா

## நிதிப் பெட்டியா? சதிப்பெட்டியா?




காலத்தின் பதிவு 100

வேறு சிறந்த திட்டம் இருந்தாலும் சொல்லலாம். அதையும் அலசிப் பார்த்து ஒரு முடிவுக்கு வருவோம் என்று கூறினான்.

உபதலைவர்களின் முகங்களில் கவலை மேலும் அதிகமாக விரிந்ததேயொழிய உதடுகளிலிருந்து சொற்களேதும் உதிராததால் சில விநாடிகளுக்கு அந்த அறையில் மௌனமே நிலவியது. தனது பெரும் கையால் தலைமயிரை அடிக்கடி துழாவிவிட்டுக் கொண்டு தீவிர யோசனையிலிருந்த அமீர் மட்டும் இறுதியில் படைத்தலைவனுக்குப் பதில் சொல்லத் துவங்கி, "இல்லை, வேறு வழியே இல்லை. நீங்கள் சொன்ன திட்டம் ஒன்றுதான் பயனளிக்கக் கூடியது. ஆனால் அதில் ஓர் இடந்தான் பலவீனமுள்ளது." என்றான்.

"எந்த இடம் அமீர்?" என்று வினவினான் படைத்தலைவன்.

"நீங்கள் பலவர்மன் மாளிகையிலேயே தங்க உத்தேசித்திருப்பது." என்று சுட்டிக்காட்டினான் அமீர்.

"அதில் என்ன பலவீனமிருக்கிறது!" என்று மீண்டும் கேட்டான் படைத்தலைவன்.

"நீங்கள் எப்பொழுதும் பலவர்மனின் நேர்க்கண் பார்வையிலிருப்பீர்கள்." என்று அமீர் சொன்னான். குரலில் கவலை பாய.

"ஆமாம், இருப்பேன்" என்றான் படைத்தலைவன் அமீரின் முகத்தை உற்று நோக்கி,

"அவசியமானால் எந்த விநாடியிலும் உங்களைப் பலவர்மன் தீர்த்துக் காட்டிவிட முடியும். உறக்கத்தில் கழுத்தையறுத்தாலும் கேட்பதற்கு ஆளிருக்காது" என்றான் அமீர். "மருமகனை அழிப்பதால் பலவர்மனுக்கு என்ன லாபம்?"

"மருமகனாவதற்கு முன்பே அழிப்பதால் லாபமிருக்குமல்லவா?" "ஆம், ஆம்... இருக்கும்.

"தலைவரான உங்களைத் தீர்த்துக் கட்டிவிட்டால் நகருக்கள் காவல் புரியும் என்னையும் இந்த மரக்கலத்தின் மாலுமிகள் ஐம்பது பேரையும் ஒழித்துவிடுவது பலவர்மனுக்கு மிகவும் எளிதல்லவா?"

"ஆம் எளிதுதான்" என்று ஒப்புக்கொண்ட இளையபல்லவன் சில விநாடிகள் ஆழ்ந்த யோசனையில் இறங்கினான். பிறகு சொன்னான்? "அமீர், ஒரு முக்கிய விடயத்தை மறந்துவிட்டுப் பேசுகிறாய். நம் அனைவரையும் காரணமின்றி அழித்தால் அகூதாவின் சீற்றத்துக்கு இலக்காக வேண்டியிருக்கும் என்ற அச்சம் பலவர்மனுக்கு இருக்கிறது" என்று.

இதற்கும் அசையாமலே அமீர் கூறினான். "இருந்தது என்று சொல்லுங்கள்?" என்று.

இளையபல்லவன் தன் கூரிய விழிகளை அமீர் மீது திருப்பினான். அவன் கண்களில் பலமான கேள்வி தொக்கி நின்றதைக் கவனித்த அமீர் தன் கருத்தை விளக்கினான். "அந்தப் பயம் பலவர்மனுக்கும் கொள்ளையருக்கும் இன்று காலை வரையில் இருந்தது. இப்பொழுது இருக்கக் காரணமில்லை என்று நீங்கள் தானே சொன்னீர்கள்?" என்று கேட்டான் தன் பெருவிழிகளை படைத்தலைவன் மீது நாட்டி.

"உண்மைதான் அமீர். அகூதாவிடமுள்ள அச்சமென்னும் கவசம் உடைந்துவிட்டதற்கு மஞ்சளழகிக்கும் எனக்குமுள்ள உறவைப்பற்றி வீண் புரளி கிளப்பிக் கொள்ளையரையும் சாட்சிக்கு அழைத்திருப்பது காரணம். ஆனால் நான் மஞ்சளழகியை மணம் செய்து கொள்ள முடிவு செய்துவிட்டதால் நிலைமை மீண்டும் பழைய ஸ்திதிக்கு வரவில்லையா? மஞ்சளழகியை முறைப்படி திருமணம் செய்து கொள்ளச் சம்மதித்ததன்றி அக்ஷயமுனையையும் பூர்வக்குடிகளிடமிருந்து காப்பாற்ற ஒப்புக்கொண்ட தனது உபதலைவனைக் கொன்றால் அகூதாவின் கரம் கண்டிப்பாய் பழிவாங்கும் என்பது பலவர்மனுக்கு விளங்காதா?" என்று வினவினான் படைத்தலைவன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

சுகமான விடியல்

389

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# இரத்தச்சோகை நிலையை தவிர்ப்பது எப்படி?

**இரத்தச்சோகை என்றால் என்ன ?**

இரத்தச் சோகை என்பது உடலில் ஈமோக்குளோபின் அல்லது இரத்தச் சிவப்பு அணுக்கள் குறைவுபடுவதே. ஈமோக்குளோபின் என்பது திசுக்களுக்கு ஒட்சிசனைக் கொண்டு செல்லும் இரத்தச் சிவப்பு அணுக்களிலுள்ள (RBC) இரும்புச்சத்து நிறைந்த புரதமாகும்.

ஒருவரின் இரத்தத்தில் ஈமோக்குளோபினின் அளவு மிகக்குறைவுபடும் போது இரத்தச் சோகை ஏற்படுகிறது.

அதாவது உடலில் போதியளவு ஒட்சிசன் வழங்கப்படாதிருக்கும் நிலையாகும். இது உடல் வெளிறுதல், களைப்பு அல்லது சோர்வு மற்றும் உடற் பலவீனத்தை ஏற்படுத்தலாம்.

இரத்தச்சோகை ஒரு குறுகிய காலத்துக்கு அல்லது ஒரு நீண்ட காலத்துக்கு நீடிக்கலாம். தீவிரம் குறைந்த நிலைமைகளில் உணவு முறையில் ஒரு எளிமையான மாற்றம் தான் சிகிச்சையாக அளிக்கப்படுகிறது. தீவிரம் கூடிய நிலைகளுக்கு மருத்துவச் சிகிச்சைகள் தேவைப்படுகின்றன.

**இரத்தச்சோகைக்கான அடையாளங்கள் மற்றும் அறிகுறிகள்**

இரத்தச்சோகைக்கான அறிகுறிகள் அதன் கடுமை, ஈமோக்குளோபின் எவ்வளவு விரைவாகக் குறைகிறது மற்றும் அதற்கான காரணம் என்ன என்பவற்றைப் பொறுத்திருக்கிறது. ஒரு பிள்ளையின் உடல் எவ்வளவு நன்றாக ஈமோக்குளோபினின் தாழ்ந்த நிலையைச் சமாளிக்கின்றது என்பதிலும் தங்கியுள்ளது. அறிகுறிகள் பின்வருவனவற்றை உட்படுத்தலாம்.


இரத்தத்தின் சிவப்பு நிறத்துக்கு ஈமோக்குளோபின்தான் காரணமாக இருப்பதால் தோல் வெளிறுதல்.

உடலில் ஒட்சிசனின் அளவு குறைக்கப்பட்டதால் உடலில் சக்தி குறைவுபடுத்தல்.

உடலின் ஒட்சிசனின் அளவு குறைந்ததால் உடற்பயிற்சி செய்த பின் அல்லது விளையாடிய பின் விரைவான சுவாசம்.

**இரத்தச்சோகைக்கான காரணங்கள் மற்றும் அதன் வகைகள்**

இரத்தச்சோகையில் பலவகைகள் இருக்கின்றன. பொதுவான காரணங்களின் அடிப்படையில் அவை வகைப்படுத்தப்பட்டுள்ளன.



**ஊட்டச்சத்து இரத்தச்சோகைகள்**

இரத்தச் சோகை வகைகள் மிகவும் பொதுவானது இரும்புச் சத்துக் குறைபாட்டினால் ஏற்படும் இரத்தச் சோகையாகும். இது உணவில் இரும்புச்சத்துக் குறைவதால் ஏற்படுகிறது. ஈமோக்குளோபின் தயாரிப்பதற்கு இரும்புச்சத்து தேவை. சாதாரணமாகக் குழந்தைகளுக்கு 6 மாதங்கள் வரைக்கும் தாய்ப்பாலிலுள்ள இரும்புச்சத்து அவர்களுக்குப் போதுமானது. இரும்புச்சத்து உள்ளடக்கப்படாத பசுப்பால் போர்முலாக்கள் அல்லது முழுப்பசுப்பால் மாத்திரம் குடிக்கும் குழந்தைக்ளுக்கு இரும்புச் சத்துக் குறைபாடு ஏற்படும் ஆபத்து இருக்கிறது. உங்கள் குழந்தை 6 மாதமுடிவில் திடஉணவு உண்ணத் தொடங்காவிட்டால் இரும்புச் சத்துக் குறைபாடு ஏற்படும். முழுமையாக முதிர்ச்சியடைந்த குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளும் ஆரோக்கியமுள்ள தாய்மார்கள், இரும்புச்சத்து நிறைந்த திடஉணவுகள் பரிந்துரை செய்யப்படும் வரையில் 6 மாதங்களுக்குத் தங்கள் குழந்தைகளுக்குத் தேவையான இரும்புச்சத்தைக் கொண்டிருப்பார்கள். தாய்ப்பாலிலுள்ள இரும்புச்சத்து நன்கு உறிஞ்சப்படும். 6 மாதங்களில் திடஉணவுகள் அறிமுகப்பட்டதிலிருந்து 2 வயதுவரை தாய்ப்பால் கொடுக்கும்படி சிபாரிசு செய்யப்படுகிறது. இது தாய்ப்பால் ஊட்டுதல் மாத்திரமல்ல. ஆனால் சிபாரிசு செய்யப்படும் சமயத்தில் இரும்புச்சத்து நிறைந்த திடஉணவுகள் அறிமுகப்படுத்தப்படாவிட்டால் இரத்தச்சோகை ஏற்படும் ஆபத்து இருக்கிறது.

எமது சமூகத்தில் முறையான தனிநபர் சுகாதாரத்தைப் பின்பற்றாதவர்களுக்குக் கொழுக்கிப் புழுத் தொற்று ஏற்படுவதாலும் இரத்தச் சோகை ஏற்படலாம். உணவில் போலிக் அமிலம் விற்றமின் B12 அல்லது விற்றமின் E குறைவுபடும் போது விற்றமின் குறைவினால் ஏற்படும் இரத்தச்சோகை உண்டாகிறது. ஈமோக்குளோபின் தயாரிப்பதற்கு உடலுக்கு இந்த எல்லா ஊட்டச்சத்துக்களும் தேவைப்படுகின்றன.

**நோயினால் ஏற்படும் இரத்தச்சோகைகள்**

1. அரிவாள் கல இரத்தச்சோகையும் தலை சீமியாவும் சிவப்பு அணுக்களை உருக்குலையச் செய்யும் பரம்பரை வியாதிகளாகும். இந்த உயிரணுக்கள் சாதாரண இரத்தச் சிவப்பு அணுக்களைப் போல உடல் முழுவதும் நன்கு நீந்திச் செல்ல முடியாது. இதனால் உடலுக்குக் குறைந்தளவு ஒட்சிசனே கிடைக்கின்றது.

2. சிறுநீரகம் செயற்படாமற் போதல், புற்றுநோய் மற்றும் க்ரோன்ஸ் நோய் என்பவற்றாலும் தீராத இரத்தச்சோகை ஏற்படலாம். என்புமச்சைநோய் மற்றும் லூபஸ் நோய் போன்ற தன்னுடல் தாக்கும் நோயினாலும் இரத்தச் சோகை ஏற்படலாம்.

3. அப்ளாஸ்டிக் இரத்தச் சோகை என்பது ஒரு அரிதான மற்றும் கடுமையான நோய். இது உடல் போதிய அளவு இரத்த உயிரணுக்களை உற்பத்தி செய்வதை நிறுத்திவிடும்.

ஒரு பிள்ளை இந்த இரத்தச் சோகை நோயுடன் பிறந்திருக்கலாம் அல்லது ஒரு வைரஸ் தொற்று நோயால் பாதிக்கப்பட்ட பின்னர் ஏற்படலாம். அல்லது ஒரு மருந்தின் வெளிப்பாடாகவும் இருக்கலாம். சில வேளைகளில் இது இரத்தப் புற்றுநோயின் தொடக்க அறிகுறியாகும்.

**இரத்தச்சோகைக்கான ஆபத்தான காரணிகள்**

இரத்தச்சோகையை விருத்தி செய்வதற்கான உயர்ந்த ஆபத்திலிருக்கும் சில பிள்ளைகளின் பிரிவுகள் இருக்கின்றன. உயர்ந்த ஆபத்துக்குக் காரணமாகக் கூடிய காரணிகள் பின்வருவனவற்றை உட்படுத்தலாம்.

குறைமாதப் பிரசவம் மற்றும் பிறப்பின் போது எடை குறைவாக இருத்தல்.

முன்னேற்றமடைந்து வரும் உலகிலிருந்து சமீபத்தில் குடியேற்றம் செய்தல்.

வறுமை

உடற்பருமன் அல்லது தவறான உணவுப் பழக்கங்கள்.

**இரத்தச்சோகையின் நீண்டகாலப் பாதிப்புக்கள்**

பிள்ளைகளிலுள்ள சிகிச்சை செய்யப்படாத இரத்தச்சோகை அவர்களின் வளர்ச்சியில் ஒரு கடுமையான பாதிப்பைக் கொண்டு வரலாம். இரத்தச்சோகை மூளை விருத்தியடைவது மற்றும் செயற்படுவதைப் பாதிக்கலாம். பெரும்பாலும் இது கூர்ந்து கவனிப்பதில் பிரச்சினைகள், வாசிக்கும் திறனில் தாமதம் மற்றும் மோசமான பள்ளிக்கூடச் செயற்திறன்கள் என்பவற்றை விளைவிக்கும். (தொடரும்)

Dr. ந. ஸ்ரீசரவணபவானந்தன்,
குழந்தை வைத்திய நிபுணர்,
போதனா வைத்தியசாலை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணமட்ட வேக நடைப்போட்டி

## பெண்கள் பிரிவில் யாழ்.மாவட்டம்

## ஆண்கள் பிரிவில் கிளிநொச்சி மாவட்டம்



(அக்கராயன்)

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில், 2024 ஆம் ஆண்டுக்கான வட மாகாண விளையாட்டுப் போட்டியின் ஓர் அங்கமாக வேக நடைப் போட்டி நேற்று சனிக்கிழமை கிளிநொச்சியில் நடைபெற்றது.

இப் போட்டியில், ஐந்து மாவட்டங்களிலும் மாவட்ட ரீதியாக தெரிவு செய்யப்பட்ட 31 வீர, வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

20 கிலோ மீற்றர் கொண்ட குறித்த போட்டியில் பெண்கள் பிரிவில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ரவிக்குமார் கௌசிகா 2 மணித்தியாலம் 18 நிமிடம் 59 செக்கனில் முதலாம் இடத்தைப் பெற்றார்.

ஆண்கள் பிரிவில் கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலர் பிரிவை சேர்ந்த கண்ணன் கலையரசன் 2 மணித்தியாலயம் 15 நிமிடம் 8 செக்கனில் நடந்து முதலாம் இடத்தை பெற்றார்.

பங்குபற்றிய வீரர்களின் அணி ரீதியில் ஆண்கள் பிரிவில் கிளிநொச்சி அணியும் பெண்கள் பிரிவில் யாழ்.மாவட்ட அணியும் வெற்றி பெற்றன. (நி-350-316)

# முல்லைத்தீவு-திருக்கேதீச்சரம் நோக்கி ஆன்மீக பாதயாத்திரை

(முல்லைத்தீவு)

இந்து தன்னார்வ தொண்டர் சங்கத்தால் முன்னெடுக்கப்படவிருக்கும் அறவழி ஆன்மீக பாதயாத்திரை நாளை திங்கட்கிழமை மாலை 3 மணியளவில் புதுக்குடியிருப்பு, மூங்கிலாறில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தில் இருந்து பரந்தன், முறிகண்டி, வெள்ளங்குளம் ஊடாக சென்று 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மஹா சிவராத்திரி விரதம் அன்று மன்னார் திருக்கேதீச்சரம் ஆலயத்தில் பாதயாத்திரையை நிறைவு செய்ய திட்டமிட்டுள்ளளோம்.

இப்பாத யாத்திரை தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற 077 048 9305, 077 467 5795 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-100)

# உணவுப் பொதியின் விலை மீண்டும் அதிகரிப்பு

(கொழும்பு)

தேநீர் மற்றும் உணவுப்பொதி ஆகியவற்றின் விலைகள் மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளன. உடனடியாக அமுலாகும் வகையில் பால் தேநீர், தேநீர் மற்றும் ப்ரைய்ட் ரைஸ், கொத்துரொட்டி ஆகியவற்றின் விலை கள் அதிகரிக்கப்படவுள்ளதாக அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பால் தேநீரின் விலை 10 ரூபாவினால் அதிகரிக்கப்படவுள்ளதுடன் தேநீரின் விலை 5 ரூபாவினாலும் உணவுப் பொதி ஒன்றின் விலை 25 ரூபாவி னாலும் அதிகரிக்கப்படவுள்ளது. அத்துடன் ப்ரைய்ட் ரைஸ் மற்றும் கொத்துரொட்டி ஆகியவற்றின் விலைகள் 50 ரூபாவினாலும் அதிகரிக்கப்படவுள்ளன.

உணவுப்பொருட்களின் உற்பத்தி செலவு அதிகரிப்பு காரணமாக விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டதாக அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (நி)

# சந்தையில் அதிகரித்துள்ள தேங்காய், முட்டை விலை

## நுகர்வோர் சாடல்

(கொழும்பு)

தேங்காய் மற்றும் முட்டை விலை அதிகரித்துள்ளதாக நுகர்வோர் குற்றஞ்சாட்டியுள்ளனர். ஒரு சில இடங்களில் ஒரு தேங்காய் 150 ரூபாவிற்கு விற்பனை செய்யுப்படுவதாகவும் சில வர்த்தக நிலையங்களில் ஒரு முட்டை 60 ரூபாவிற்கும் அதிகமாக விற்கப்படுவதாக நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த வாரங்களுக்கு முன்னர் சந்தையில் 50 ரூபாய் முதல் 55 ரூபாய் வரை விற்கப்பட்ட முட்டை தற்போது 60 ரூபாய்க்கும் அதிகமாக விற்கப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இன்று ஒரு தகவல் 53



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## பாடல்கள் பலவிதம்

அவிநாசிப்புலவர் என்று ஒருத்தர் இருந்தார்....

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள வாசுதேவ நல்லூர் தான் அவர் பிறந்த ஊர். ஆனாலும் இவர் அதிகமாக இருந்தது கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள அவிநாசி என்னும் ஊரில். அதனால்தான் இவருக்கு அவிநாசி புலவர் என்று பெயர்.

"அவிநாசி கருணைபுரி மாலை" இவர் எழுதிய நூல். இவருக்கு இசை பாடுவதை விட வசை பாடுவதே அதிக விருப்பம். இவருடைய பாடலை படித்து பார்த்தால் அப்படி தான் நினைக்க தோன்றும். அப்போது ஒரு பணக்காரர் இருந்து இருக்கிறார். அவரிடம் போய் இந்த புலவர் பாட இருக்கிறார். அந்த ஆள் கொஞ்சம் கெட்டியான ஆள் போல இருக்கு. போயிட்டு வா என்று சொல்லி விட்டார் ஒன்றும் குடுக்கவில்லை. இசைப் பாடலை கேட்டும் பரிசு ஒன்றும் கொடுக்கவில்லை என்றதும் இவருக்கு அதிக கோபம் வந்து விட்டது. உடனே வசை பாடல் பாட ஆரம்பித்து விட்டார். வசை பாடல் என்று சொல்வதை விட அதை வதைப்பாடல் என்று சொல்லலாம். அப்படிப் பட்ட கற்பனை. எப்படி தெரியுமா?

பரிசு கொடுக்காத அந்த ஆளை அவருக்கு உயிர் இருக்கின்ற வரைக்கும் நட்டுவாக்காலியும் தேளும் கொட்டணுமாம். அதுவும் சும்மா கொட்டக் கூடாதாம். கோபத்தோடு கொட்ட வேண்டும். திரு திரு என்று முழிக்கின்ற அந்த முழியிலே ஒரு குளவி வந்து கொட்ட வேண்டும் என்றும் அதிலே இருந்து ரத்தம் ஆறாய் கொட்ட வேண்டும். இப்படியே போகிறது கற்பனை. அதை நமது வாயாலே சொல்ல வேண்டாம். அவர் எழுதி இருக்கிற பாட்டையே படித்து விடுவோம் படிக்கட்டுமா?

சீவனுள்ளவுமே நட்டுவக்காலியும் தேளும் சினந்து கொட்ட
திரு திரு என முண்ட விழியில் குளவி கொட்ட அது
செங்குருதி ஆறு கொட்டப்
பாவமகனே உனது வாசலில் சாம்பிணக்
கொட்டுகள் வந்து கொட்டக்
பந்தரடி மாரடிக் துறவினர்கள் வாய்க்கரிசி
படி நெல் கொணர்ந்து கொட்டக்
ஆவலொடு கால் மாட்டில் உனது பெண்டாட்டிகள்
ணருவி ஒரு கோட்டை கொட்ட
ஐயையோ என் செய்வேன் என்று மகன் நீர் மாலை
அதனை கொணர்ந்து கொட்ட
சாவடியில் அறுதலிகள் கூடி அழ நீ வந்து
சப்பாணி கொட்டி அருளே
சண்டிக்கு லாமனே வெங்கட் ராமனை
சப்பாணி கொட்டி அருளே

இந்த ஆளுக்கு எவ்வளவு பயங்கரமான கற்பனை பாருங்கள். கொடுத்தா ஒரு பேச்சு. கொடுக்கலை என்றால் ஒரு பேச்சு. இந்த நிலை அப்பவே இருந்து இருக்கும் போல. இருந்தாலும் புலவர் வாக்கு பொய்க்காது என்று சொல்வார்கள்.

இந்த புலவர் இந்த பாட்டை பாடிய கொஞ்ச நாளிலேயே அந்த பணக்காரர் போய் சேர்ந்து விட்டார் என்று சொன்னார். அது எந்த அளவுக்கு உண்மை என்று நமக்கு தெரியாது இருந்தாலும் ஒரு விடயம் மட்டும் நமக்கு புரிகிறது.

அதாவது இந்த மாதிரி புலவர்களுக்கு பயந்து போய் தான் அந்த காலத்தில் நிறைய பேர் வள்ளலாக இருந்து இருப்பார்கள் போல இருக்கு.

நமக்கு எதுக்கு வீண் வம்பு. பாட்டு பாடினால் ஏதாவது இருப்பதை கொடுத்து விட்டு அமைதியாக அனுப்பி வைத்துவிடுவோமே என்று நினைத்து இருப்பார்கள். ஒருத்தர் கொடுக்கவில்லை என்றால் இவன் மாதிரி கோபப்படுபவர்களும் உண்டு. சில பேர் கோபப்படுவதற்கு பதிலாக தன்னையே நொந்து கொள்வதும் உண்டு.

பொன்னம்பலக் கவிராயர் இந்த ரகம். அவருக்கு ஊர் ராமனாதபுரம். இவர் யாரிடம் என்ன பாட்டு பாடினாரோ என்ன நடந்ததோ தெரியவில்லை. இருந்தாலும் அதை நினைத்து நொந்து போய் ஒரு பாட்டு பாடி இருக்கிறார்.

ஏட்டைக்கட்டினேன்...... எழுத்தோட எழுத்தை வைத்து கட்டினேன்..

அதோட இசையை கட்டினேன்....

கொடுக்க தெரியாத பலபேர் மேல் பாட்டை கட்டினேன். கடைசியில் தொண்டை கட்டியது தான் மிச்சம் என்கிறார் இவர் . அது மட்டும் இல்லை இந்த பாவம் என்றைக்குத்தான் தீரும் என்று இவருக்கு கவலை. அது தான் தெய்வத்தை வேண்டி இருக்கிறார்.


"ஏட்டை கட்டி எழுத்தோடு எழுத்தை வைத்து
இணைத்து கட்டி இசைக்கட்டி லோபர்மேல்
பாட்டை கட்டி என் தொண்டையும் கட்டிய
பாவம்; தான் இனி என்றைக்கு தீருமோ
தோட்டை கட்டும் குழலே நினது அடித்
துணையை கட்டிய பேர்க்குப் பரகதி
வீட்டை கட்டிய தாயை சவுந்தர மீனவன் பங்கின் மீனாட்சி அம்மையே!

அந்த காலத்திலே பாட்டு எழுதுபவர்கள் எப்படி எல்லாம் கஷ்டப்பட்டு இருக்கிறார்கள் பார்த்தீர்களா? இந்த காலத்தில் அப்படி இல்லையே. ஒரு அம்மா சொன்னாங்க ... 'எங்க வீட்டுக்காரர் நிறைய எழுதுவார்....' பத்திரிகைக்கு அனுப்புவார். நான் தான் அவரை நிறைய எழுதசொல்லி உற்சாகப்படுத்துவேன். நானும் ரொம்ப சந்தோசப்பட்டேன். பின்பு தான் விடயம் புரிந்தது. அவர் ஏன் அவரை உற்சாகப்படுத்தினார் என்பது. அந்த ஆளு நிறைய எழுதி எழுதி அனுப்புவாராம். போன வேகத்தோடு பத்திரிகை காரியாலயத்தில இருந்து கட்டு கட்டாக திரும்பி வருமாம். இந்த அம்மா அதை எல்லாம் பழைய பேப்பர் கடையில் போட்டு அந்த வருமானத்தை வைத்து குடும்பம் நடத்துகிறாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்ய எதிர்க்கட்சி தலைவரின் இறுதி நிகழ்வில் ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்பு





(மொஸ்கோ)

கடும் பாதுகாப்பு கெடுபிடிகளையும் மீறி ஆயிரக்கணக்கான ரஷ்ய மக்கள் எதிர்க்கட்சி தலைவர் அலெக்ஸி நவால்னியின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

ரஷ்ய ஜனாதிபதியை கடுமையாக விமர்சித்த அலெக்ஸி நவால்னி 16 ஆம் திகதி சிறையில் உயிரிழந்தார்.

இது தொடர்பில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவது குற்றம் என அதிகாரிகள் எச்சரித்திருந்தனர்.

பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டிருந்த போதிலும் இறுதிநிகழ்வில் கலந்து கொண்ட மக்கள் நவால்னியின் பெயரை குறிப்பிட்டு கோசங்களை எழுப்பினர்.

நவால்னி பல வருடங்களாக வசித்த ரஷ்யாவின் மர்யினோ பகுதியில் நேற்று முன்தினம் இறுதிநிகழ்வுகள் இடம்பெற்றவேளை ஆயிரக்கணக்கில் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

கடும் குளிருக்கும் மத்தியில் ஒரு கிலோமீற்றர் தூரத்திற்கு மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர் என நவால்னியின் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

அங்கு காணப்பட்ட மக்கள் அரசியல் ரீதியில் கோசங்களை எழுப்பினர். எனினும் பொலிஸார் அதில் தலையிடவில்லை. யுத்தம் வேண்டாம் புடின் இல்லாத ரஷ்யா சுதந்திரமடையும் என மக்கள் கோசங்களை எழுப்பினர். (நி)

# வடக்கு காசாவில் பஞ்சம் ஏற்படும் அபாயம்



(காசா)


காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல்கள் நீடித்து வரும் நிலையில் விரைவில் வடக்குக் காசாவில் பஞ்சம் ஏற்படும் அபாயம் காணப்படுவதாக உலக உணவுத் திட்டம் எச்சரித்துள்ளது.

வடக்கு காசாவை உதவிகள் சென்றடைய விடாமல் இஸ்ரேலிய படைகள் தொடர்ந்து தடுத்து வருவதால் கடந்த ஜனவரி 23 ஆம் திகதி தொடக்கம் வடக்கு காசாவுக்கு உதவிகளை வழங்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் காசாவில் மனிதாபிமான நெருக்கடி மோசமடைந்திருப்பதாகவும் அதனை ஐ.நாவால் கையாள முடியாத சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் காசாவுக்கான உதவிகள் தயார் நிலையில் எல்லையில் காத்திருப்பதாக ஐ.நா செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரஸ் தெரிவித்துள்ளார். (நி)

# தாய்வானை வட்டமிட்ட 19 சீனப் போர் விமானங்கள்



(பீஜிங்)

கடந்த 24 மணி நேரத்தில் 19 சீன இராணுவப் போர் விமானங்கள் மற்றும் 7 கடற்படைக் கப்பல்கள் தமது நாட்டுக்கு அருகில் ரோந்து சென்றதாக தாய்வானின் தேசிய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அதாவது சீனாவின் நடவடிக்கைக்கு பின்னர் தாய்வான் இராணுவம், விமானப்படை விமானங்கள், கடற்படைக்கப்பல்கள் மற்றும் வான் பாதுகாப்பு ஏவுகணை அமைப்புகளை நிலை நிறுத்தியுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் சீனாவின் போர் விமானங்கள் 253 முறையும் கடற்படை கப்பல்கள் 150 முறையும் தாய்வானின் வான்பரப்பு மற்றும் கடற்பரப்பில் ரோந்து சென்றதாக தாய்வான் கூறியுள்ளது.

மேலும் 2020 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் முதல் தாய்வான் அருகில் சீனா தொடர்ந்து தனது இராணுவ ஊடுருவல்களை மேற்கொண்டு வருகிறது.

தாய்வானில் ஊடுருவதை மறைக்க சீனா இராணுவப் பயிற்சிகளை அதிகரிக்கக்கூடும் என அமெரிக்காவின் இந்தோ-பசுபிக் கடற்படை தளபதி அட்மிரல் சாமுவேல் பாப்பரோ தெரிவித்துள்ளார்.

மேலும் சீனாவுக்கு அருகில் உள்ள தீவு நாடான தாய்வான் தன்னை ஒரு சுதந்திர நாடு என கூறி வருகிறது. எனினும் தாய்வான் தனக்கு சொந்தமானது என சீனா தெரிவித்து வருகிறது.

தாய்வான் 1996 ஆம் ஆண்டு முதல் தேர்தலை நடத்தி அதன் ஜனநாயக ரீதியான அரசாங்கங்களை தேர்ந்தெடுத்துள்ளது. தாய்வானின் மிகப்பெரிய ஆதரவாளராகவும் நட்பு நாடாகவும் அமெரிக்கா இருந்து வருகிறது.

குறிப்பாக இந்த இருநாடுகளும் உத்தியோகபூர்வ இராஜதந்திர உறவுகளைக் கொண்டிருக்கவில்லை என்றாலும் தாய்வானுக்கு தேவையான ஆயுதங்கள் அமெரிக்காவினால் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பாஸ்மதி அரிசி ஏற்றுமதி சர்வதேச சந்தையில் சரிவு

(டில்லி)

சர்வதேச சந்தையில் இந்தியாவின் பாஸ்மதி அரிசி ஏற்றுமதிக்கு சரிவு ஏற்படுவதற்கான காரணம் குறித்த தகவல் வெளியாகியுள்ளது.

அதாவது கடந்த ஆண்டில் இந்தியாவின் பாஸ்மதி அரிசிக்கான ஏற்றுமதி சாதனை அளவையும் தாண்டியது. ஆனால், இந்த ஆண்டு சரிவை நோக்கி சென்று கொண்டிருக்கிறது.

இதற்கு முக்கிய காரணம் என்னவென்றால் சர்வதேச சந்தையில் இந்திய பாஸ்மதி அரிசியின் பெரும் போட்டியாளரான பாகிஸ்தானின் எழுச்சி தற்போது ஆரம்பித்துள்ளது.

பாஸ்மதி அரிசியை இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகள் போட்டி போட்டு ஈரான், ஈராக், ஏமன், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு அனுப்புகிறது.

கடந்த ஆண்டில் இந்தியாவின் பாஸ்மதி அரிசி ஏற்றுமதி 4.9 மில்லியன் மெட்ரிக் தொன்னாக உயர்ந்தது. இதனால், உலகின் மிகப்பெரிய ஏற்றுமதியாளராக 5.4 பில்லியன் டொலர்களை குவிக்க முடிந்தது. இது அதற்கு முந்தைய ஆண்டை விட 21% அதிகமாகும்.

இந்த ஆண்டு இந்தியாவை விட பாகிஸ்தானின் உற்பத்தி அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு, பாகிஸ்தானின் மொத்த அரிசி ஏற்றுமதி 3.7 மில்லியன் தொன்னாக இருந்த நிலையில், 2023-24 ஆம் நிதியாண்டில் 5 மில்லியன் தொன்னாக உயர்ந்துள்ளது.

கடந்தாண்டில், இந்திய பாஸ்மதி அரிசிக்கான கொள்முதலை 36 சதவீதமாக ஈரான் குறைத்தது. இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்தே இந்தியாவின் பாஸ்மதி அரிசி ஏற்றுமதி வீழ்ச்சியடையத் தொடங்கியது.

செங்கடல் வழிகப்பல்போக்குவரத்தில் ஏற்படும் இடையூறுகளாலும் சரக்கு செலவுகள் காரணமாகவும் பாஸ்மதி அரிசி ஏற்றுமதி குறையக்கூடும். இது இந்தியாவில் உள்ள ஏற்றுமதியாளர்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது. (நி)

# தனுஷ்கோடியை நோக்கிப் படையெடுக்கும் பிளமிங்கோ பறவைகள்

(சென்னை)

தமிழகத்தின் தனுஷ்கோடி மற்றும் இராமேஸ்வரம் பகுதிகளுக்கு ஆயிரக்கணக்கான பிளமிங்கோ பறவைகள் விஜயம் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் கடல் மாசுபாடு மற்றும் கடல் நீரின் தரம் குறைவடைந்துள்ளதன் காரணமாக, வழமையாக வருகை தரும் பறவைகளின் எண்ணிக்கையை விட இம்முறை மிகவும் குறைந்தளவான பிளமிங்கோ பறவைகளே வருகை தந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இந்த ஆண்டு 40 நாட்களுக்குப் பின்னரே தனுஷ்கோடி பகுதிக்கு பிளமிங்கோ பறவைகள் வருகை தந்துள்ளன எனவும் தொடக்கத்தில் 400 பறவைகள் வந்த நிலையில் தற்போது 4,000 உட்பட்ட பறவைகள் குஜராத் மாநிலத்தில் இருந்து தனுஷ்கோடி பகுதிக்கு வந்த வண்ணம் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்.

– புனித பைபிள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எம் தமிழ்த் தேசத்தில் சாந்தன் என்றும் வாழ்வான்

இந்திய உயர்நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட சாந்தன் தன் தாயகத்துக்கு வருவதற்கு ஆவல் கொண்டிருந்த போதிலும் மனிதாபிமானமற்றவர்களின் இழுத்தடிப்பால், சாந்தன் உயிரோடு தன் தாயகத்துக்கு வரமுடியவில்லை.

தன் மகன் இன்று வருவான். நாளை வருவான் எனக் காத்திருந்த தாயால் அவனை உயிரோடு பார்க்கமுடியவில்லை.

என்ன செய்வது மனிதநேயம், மனித உரிமை என்றெல்லாம் பேசப்பட்டாலும் மனித நேயமற்றவர்களின் வஞ்சகத்தனங்கள் அரங்கேற்றப்பட்டு விடுகின்றன.

பரவாயில்லை. சாந்தன் உயிரோடு தன் தாயகம் செல்வதை யாரெல்லாம் தடுத்தார்களோ, யாரெல்லாம் காலம் தாழ்த்தினார்களோ அவர்கள் எல்லாம் வெட்கித் தலை குனியும்படியாக நிலைமை அமைந்துவிட்டது.

ஆம், தாயகத்துக்கு சாந்தன் புறப்படுவதற்கான அனுமதிகள் காலம் தாழ்த்தி வழங்கப்பட்ட நிலையில், சென்னை மருத்துவமனையில் சாந்தனின் உயிர் பிரிந்தது.

சென்னையில் சாந்தனின் உயிர் பிரிந்தது என்ற செய்தி அத்தனை தமிழ் உறவுகளையும் அவன்பால் திரும்பிப் பார்க்க வைத்தது.

ஆம், சாந்தன் தன் தாயகம் செல்வதை தடுக்க வேண்டும் என நினைத்தவர்கள் – அதற்காகக் காலம் கடத்தியவர்கள் தங்கள் நோக்கத்தில் வெற்றி பெற்றிருக்கலாம்.

ஆனால் உயிரற்ற உடலாக தன் தாயகம் வருகின்ற சாந்தன் ஈழம் என்ற எல்லை கடந்து அத்தனை தமிழ் உறவுகளின் இதயங்களிலும் உயிர்ப்புப் பெற்றான் என்பது தான் உண்மை.

சாந்தன் தமிழ் மக்களின் உள்ளங்களில் வாழ வேண்டியவன். அந்தளவுக்கு அவன் ஈழத் தமிழ் மக்களை நேசித்தவன். தமிழ் உறவுகள் உரிமையோடு வாழ வேண்டும் என்பதற்காகத் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தவன்.

ஆகையால் சாந்தனுக்கு எங்கும் அஞ்சலி செலுத்தப்பட வேண்டும். அவனை அனைவரும் நினைவுகூர வேண்டும். அதுவே அவனுக்கு வழங்கப்பட வேண்டிய நீதி என இயற்கை தீர்ப்பளிக்கிறது.

இயற்கையின் – இறைவனின் நியதிப்படி சாந்தனுக்கு இன்று ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் தங்கள் இதயத்தால் அஞ்சலி செலுத்துகின்றனர்.

சாந்தனின் வாழ்க்கை எங்கள் இன விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றோடு சேர்க்கப்படுகிறது.

இந்தப் புகழும் பெருமையும் காலம் அவனுக்கு வழங்கிய வெகுமதி.

சாந்தனின் திருவுடலுக்குத் தமிழ் உறவுகள் நேரில் சென்றும் உள்ளத்தாலும் நிச்சயம் அஞ்சலிப்பர்.

அவன் இனி எம் தமிழ்த் தேசத்தில் என்றும் உயிர் வாழ்வான்.

## மத்திய கல்லூரிக்கு பெண் அதிபர் நியமனம்

### தற்காலிகமாக இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு புதிய அதிபராக நியமனக் கடிதம் வழங்கப்பட்ட திருமதி செல்வ குணபாலனின் நியமனத்தை தற்காலிகமாக இடை நிறுத்துவதாகக் கல்வி அமைச்சின் செயலாளர் வசந்த பெரகரா எழுத்து மூலமான கடிதத்தை அனுப்பியுள்ளார்.

குறித்த கடிதத்தில் செயலாளரினால் கடந்த 22 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் மத்திய கல்லூரி அதிபராக நியமிக்கப்பட்ட தங்களின் நியமனத்தைத் தற்காலிகமாக இடைநிறுத்தி வைப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-7)

## வடக்கு கடற்பரப்பில் கறுப்புக்கொடி போராட்டம்

இந்திய இழுவை மடி படகுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று ஞாயிற்றுக் கிழமை(3) சம நேரத்தில் வடபகுதி கடற்பரப்பில் கடற்தொழிலாளர்கள் கடலில் கறுப்புக் கொடி போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

இன்று(3) காலை ஒன்பது மணிக்கு பருத்தித்துறை தொடக்கம் வடமராட்சி கிழக்கு வரையும், காங்கேசன்துறை- மயிலிட்டி- பலாலி வரையும் மாதனை தொடக்கம் காரைநகர் வரையும் நெடுந்தீவு- அனலைதீவு- நயினாதீவு வரை இப்போராட்டமானது சம நேரத்தில் இடம்பெறவுள்ளது.

தமது வாழ்வாதாரத்தை இழுவை மடிப் படகுகள் அழிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தே வடபகுதிக் கடலில் இன்று(3) கறுப்பு கொடி போராட்டம் சம நேரத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,60)

## யுக்திய சுற்றிவளைப்பு மேலும் வலுப்பெறும்

### பொலிஸ் மா அதிபர்

யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கை மேலும் வலுவாக முன்னெடுக்கப்படும் என பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில் நேற்று வழிபாடுகளை மேற்கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் இதனை குறிப்பிட்டுள்ளார்

குற்றச்செயல்களுடன் ஆட்கடத்தல் சம்பவங்கள் பாதாளக் குழு செயற்பாடுகளை முழுமையாக ஒடுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் பொலிஸ் மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்படுவதுடன் எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## இறக்குமதி செலவு மேலும் அதிகரிப்பு

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு ஜனவரியில் பொருட்களின் ஏற்றுமதி வருமானம் குறைந்துள்ளதாகவும், இறக்குமதி செலவு அதிகரித்துள்ளதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதன்படி, ஏற்றுமதி வருவாய் கடந்த ஆண்டு ஜனவரியுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு 0.8% சரிவை பதிவுசெய்துள்ளது.

கடந்த ஆண்டு ஜனவரியில், ஏற்றுமதி வருவாய் 978 மில்லியன் அமெரிக்க டொலர்களாகவும், இந்த ஆண்டு ஜனவரியில், 971 மில்லியன் அமெரிக்க டொலர்களாகவும் பதிவாகியுள்ளது.

விவசாய மற்றும் ஆடை ஏற்றுமதி வருமானத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியே இதற்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ம-7)

# பரமபிதா காட்டிய பாதை

## கடவுள் உறையும் ஆலயத்தை அலகையின் குகை ஆக்காதிருப்போம்

தவக்காலத்தின் மூன்றாவது ஞாயிறான இன்று எமக்குத் தரப்படும் பைபிளின் பகுதி யோவான் எழுதிய நற்செய்திப் பகுதியிலிருந்து வருகிறது 2:13-25. கடவுள் வாழும் ஆலயத்தை அசிங்கப்படுத்துவோரை இயேசு அடித்துத் துரத்திய நிகழ்வைப் படம்பிடித்துக்காட்டுகிறது. அங்கே அப்பொழுது பாஸ்கா திருவிழா நெருங்கிக் கொண்டிருக்கிற நேரம். ஜெருசலேம் தேவாலயத்திலிருந்து 15கிலோ மீற்றர் சுற்றளவுக்கு இருக்கிற ஒவ்வொரு ஆண்மகனும் ஜெருசலேம் தேவாலயம் சென்று பாஸ்கா திருவிழாவைச் சிறப்பிக்க வேண்டும் என்பது அன்று இருந்த யூதர்களின் சட்டங்களில் ஒன்று.

இயேசு எதற்காக இவ்வளவுக்குக் கோபப்பட வேண்டும். எது இயேசுவை எரிச்சலடைய வைத்தது என எண்ணிப் பார்க்க வேண்டும். யூதர்களுக்குப் பாஸ்கா திருவிழா மிக, மிக முக்கியமான திருவிழா. உலகின் பல பகுதிகளில் சிதறடிக்கப்பட்டிருந்த ஒவ்வொரு யூதர்களும் ஜெருசலேமுக்கு வந்து பாஸ்காவிழா கொண்டாட முயற்சி செய்வர். எனவே, ஒவ்வொரு பாஸ்கா திருவிழாவின் போதும் ஜெருசலேமில் இரண்டு இலட்சத்திற்கும் அதிகமானோர் வருவது வரலாறாயிற்று. பொதுவாக, ஒவ்வொரு யூதக்குடி மகனும் ஆலய வரி செலுத்த வேண்டும். அந்த வரியை யூதர்களின் செக்கேல் பணத்தில் கொடுக்க வேண்டும். வேறு பணத்தை ஆலயத்தில் செலுத்த முடியாது. உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து வரும் யூதர்கள், தாங்கள் கொண்டு வந்திருக்கிற வேறு பணத்தை, அங்கே இருந்த நாணயம் மாற்றுவோரிடம் கொடுத்த போது நாணயம் மாற்றுவோர் அநியாய முறையில் சுரண்டல் செய்தனர். வேறு வழியில்லாமல் வெளிநாட்டு வாழ் யூதர்களும் அதற்கு அடிபணிந்தனர்.

இது ஓர் அநீதி. குறிப்பாக, ஏழைகளுக்கு இதனால் பாதிப்பு அதிகம். எனவே தான் இந்த சமூக அநீதிக்கு எதிராக இயேசு சாட்டையை எடுக்கிறார். சமூக நீதியை நிலைநாட்ட அதிக அக்கறை எடுத்துக் கொண்ட மாபெரும் மனித நேயம் கொண்ட மனிதர் இயேசு. நாம் வாழும் இந்த சமூகத்திலே இன்று எத்தனையோ அநீதிகள் நம் கண்முன்னால் அரங்கேறிக் கொண்டிருக்கிறது. நம்மை அது பாதிக்காதவரை நாம் அதைக்கண்டு கொள்வதில்லை. இயேசுவைப் போல அநீதிக்கு எதிராக துணிந்து போராட நாம் தயாராக வேண்டும்.

இயேசு கோவிலுக்குச் செல்லும் வேளையில் அங்கு விரும்பத்தகாத செயல்கள் நிகழ்வதைக் காண்கிறார். ஆடு, மாடுகளையும் புறாக்களையும் விற்கின்றவர்கள் ஒருபக்கம், நாணயம் மாற்றுவதில் ஈடுபடுவோர் மறுபக்கம் என்று கோவிலில் ஒரே சந்தடி நிலவுகிறது. கடவுளை வழிபடுவதற்கு என ஒதுக்கப்பட்ட இடம் ஒரு சந்தைக்கூடம் போல மாறிவிட்டதை இயேசு கடிந்து கொள்கிறார். இயேசு கோவிலிலிருந்து எல்லோரையும் துரத்தியடிக்கின்றார்.

இயேசுவின் இச்செயலிற்கு விளக்கம் கொடுக்க முனையும் சிலர் இயேசு வன்முறையில் ஈடுபட்டார் எனவும் தேவைப்பட்டால் வன்முறையில் நாமும் ஈடுபடலாம் எனவும் வாதாடுகின்றனர். ஆனால் வன்முறை என்றால் பிறருடைய உயிருக்கோ, உடைமைக்கோ அழிவு கொணர்வது என நாம் பொருள் கொண்டால் இயேசு அத்தகைய வன்முறையில் ஈடுபடவில்லை. என்றாலும் கடவுளின் இல்லம் கள்வர் குகை போல் ஆவதையும் இயேசு அனுமதிக்கவில்லை. எனவே இயேசு கண்டிப்போடு செயற்பட்டார் என்பதில் ஐயமில்லை.

இன்னொரு கோணத்திலிருந்து பார்த்தால் இயேசு தம் உடலைக் கோவிலுக்கு ஒப்பிட்டுப் பேசுகிறார். இயேசுவிடத்தில் கடவுள் குடிகொண்டிருந்தார் என்பதே இதன் பொருள். கடவுள் தம் சாயலாக நம்மை உருவாக்கியிருக்கின்றார். எனவே நாம் அனைவரும் கடவுளின் இல்லம், கடவுள் உறைகின்ற கோவில். தூயபவுல் இவ்வுண்மையை அழகாக எடுத்துரைக்கிறார்: "நீங்கள் கடவுளுடைய கோவிலென்று... உங்களுக்குத் தெரியாதா?" கடவுளின் கோவிலாக மனிதர் உள்ளனர் என்னும் உண்மை ஆழமானது. மனிதருக்கு நாம் தீங்கிழைக்கும் போது கடவுளையே பழிக்கிறோம் எனலாம்.

மனிதர் கடவுளின் அன்புப் படைப்புக்கள் என்னும் உண்மையை நாம் ஏற்று அதற்கேற்ப மனிதரை மதித்து நடந்தால் கடவுளுக்கே மாட்சி அளிக்கின்றோம். கோவில் என்பது கல்லாலும் மண்ணாலும் ஆன கட்டடம் மட்டும் அல்ல. உயிருள்ள மனிதரே கடவுள் உறையும் இல்லமாக உள்ளனர் என்பதை உணர்வோர் கடவுளுக்கும் மனிதருக்கும் இடையே நிலவுகின்ற நெருங்கிய உறவைப் புரிந்து கொள்வர். இத்தவக்காலப் பயணத்தில் எமது வாழ்வில் ஆழமான மனமாற்றத்தின் தாக்கத்தை ஏற்படுத்த அழைக்கப்பட்டுள்ளோம். இப்போது புதுப்பித்துக் கொள்வோம்.

ம.பிரான்சிஸ்க்,
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜனாதிபதி செயலகத்தின் மேலதிக செயலாளர் திரு.இளங்கோவன் மற்றும் யாழ்.மாவட்ட செயலாளர் திரு.ஏ.சிவபாலசுந்தரன் ஆகியோர் யாழ்.பாதுகாப்புப் படைத் தலைமையக தளபதியை அண்மையில் அவரது அலுவலகத்தில் சந்தித்தனர். (படம்- சிவசாந்தன்)

## மணல் ஏலவிற்பனை


(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு பகிரங்கமாக 81 கியூப் மணல், 9 கியூப் மண், 3 கியூப் கிரவல் என்பன ஏலவிற்பனை செய்யப்படும். 1கியூப் மணலின் அடிப்படை விலை-4500. 1கியூப் ஊத்தை மண்ணின் அடிப்படை விலை-100, 1 கியூப் கிரவலின் அடிப்படை விலை-1500 என கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (நி)



கிளிநொச்சி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியினை முன்னிட்டு மாணவர்களுக்கான மரதன் ஓட்ட நிகழ்வு நேற்று நடைபெற்றது. போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களை யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி வழங்கி வைத்தார்.

(படம்- கிருஷ்ணகுமார்)



யாழ். வடமராட்சி தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ கலை பண்பாட்டு பேரவையின் மாதாந்த இதழான ஞானச்சுடர் 314 ஆவது இதழ் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. சந்தியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன் சுவாமிகள் தலைமையில் இந் நிகழ்வுகள் இடம்பெற்றன.

(படம்-மகாலிங்கம்)





பாலைதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா நேற்று சிறப்பாக நடைபெற்றது. திருவிழா திருப்பலியை யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி ஜெபரட்ணம் அடிகளார் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார்.

(படங்கள்- சிவசாந்தன்)


## பவள விழாக்காணும் கொட்டடி சனசமூக நிலையம்



1949இல் ஆரம்பிக்கப்பட்ட கொட்டடி சனசமூக நிலையமானது பல்வேறு இடையூறுகள் மத்தியிலும் ஓங்கி வளர்ந்து நிமிர்ந்து நின்று 2024இல் பவள விழாவைக் கண்டு நிற்கின்றது. எத்தனையோ பெரியோரெல்லாம் கால்பதித்து சிறப்பித்து பணிபுரிந்த இந்த நிலையமானது யாழ்.மாநகரத்தின் முதல் மாநகர முதல்வாரன Sam.A.சபாபதி அவர்களின் கால்பதித்து நெறிப்படுத்தப்பட்டது. அதன்பின் C.M.C. செல்லப்பா, சீவரட்ணம், ஜெகதீசன், யோகசுந்தரம், நமசிவாயம், செல்வ வடிவேல், சுஜீந்திரன், ஸ்ரீராஜகுலேந்திரன், கனேந்திரன் என பலராலும் கௌரவிக்கப்பட்டு இன்று பவளவிழா கண்டு நிற்கின்றது. இதன் சரித்திரம் தெரிகின்ற வகையில் எத்தனைபேர் இங்கு வாழ்கிறார்கள். இந்நிலையத்தின் சேவைகள் பல. இதனுடைய கிளைகள் பல இயங்கின. இந்த கட்டிடம் அமைந்துள்ள நிலம் நமசிவாயம் செட்டியார் குடும்பத்தாருக்கு சொந்தமானது. குறிப்பாக யாழ்.குடாநாட்டில் வாழும் கலைஞர்கள், சாதனையாளர்கள், முதியோர், மகளிர், சிறுவர் என பலரும் பாராட்டிய பெருமை இந்நிலையத்திற்கே உரியது. பல்கலைக்கழக பேராசிரியர்கள், இசைக்கலைஞர்கள், நாடகக் கலைஞர்கள், சமயப்பெரியார்கள், இந்தியதுணைத் தூதுவர் இவர்களை எல்லாம் அழைத்து கௌரவித்து அவர்களுக்கு பட்டங்கள் விருதுகள் வழங்கி கௌரவித்த பெருமை இந்த நிலையத்திற்கே உரியது. இதன் 2 மாடியும் கட்டி முடிப்பதற்கு உதவியவர்கள் பலர். இது தான் பவளவிழாவில் உள்ள சரித்திரமாகும். (19338)

கொட்டடி சனசமூக நிலையம்,
கொட்டடி கிராம அபிவிருத்தி சங்கத்தின் முன்னால் தலைவர்.



## மணிவிழா வாழ்த்துக்கள்




திரு.சி.தர்மரட்ணம்
அதிபர் யா/நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை

03.03.2024 இன்று ஞாயிற்றுக்கிழமை
அதிபர் பணியில் இருந்து ஓய்வுபெறும்
திரு.சி.தர்மரட்ணம்
அவர்களிற்கு மணிவிழா
வாழ்த்துக்களையும்
பிறந்த தின வாழ்த்துக்களையும்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

(19338)

வாழ்த்துவோர்- கோட்டக் கல்விப் பணிப்பாளரும் அதிபர்கள் சங்கமும்,
கோப்பாய் கல்விக்கோட்டம்.


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 150 | 200 | 220 | 250 |
| உருளைக்கிழங்கு | 160 | 180 | 160 | 140 | 180 |
| பச்சைமிளகாய் | 400 | 500 | 400 | 475 | 450 |
| தக்காளி | 300 | 350 | 300 | 290 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 80 | 170 | 200 |
| கோவா | 350 | 420 | 350 | 300 | 500 |
| கரட் | 600 | 500 | 520 | 400 | 600 |
| பூசணி | 200 | 260 | 170 | 170 | 280 |
| புடோல் | 150 | 200 | 150 | 130 | 200 |
| வாழைக்காய் | 200 | 250 | 130 | 200 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 220 | 320 | 250 |
| பெரிய வெங்காயம் | 400 | 400 | 380 | 350 | 450 |
| பாகற்காய் | 350 | 400 | 350 | 300 | 400 |
| வெண்டக்காய் | 250 | 300 | 150 | 155 | 450 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 100 | 150 |
| பயற்றங்காய் | 200 | 200 | 200 | 310 | 400 |
| லீக்ஸ் | 300 | 400 | 350 | 300 | 400 |
| பீற்றூட் | 350 | 350 | 350 | 300 | 400 |
| கறிமிளகாய் | 450 | 500 | 400 | 350 | 500 |
| முருங்கைக்காய் | 1800 | 1300 | 800 | 1800 | 1200 |
| போஞ்சி | 300 | 350 | 400 | 300 | 500 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 150 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 40 | 40-50 | 100 |
| தேசிக்காய் | 150 | 200 | 120 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 110 | 110 | 65-110 | 70-100 |
| இராசவள்ளி | 320 | 400 | 300 | 350 | 300 |
| வெங்காயப்பூ | 150 | 200 | 150 | 130 | 300 |
| முள்ளங்கி | 80 | 150 | 80 | 140 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 80 | 120 | 60 |
| வல்லாரை | 60 | 250 | 50 | 80 | 60 |
| [illegible] | 80 | 150 | 70 | 100 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லை...

இடம்பெற்றுள்ளது.

இதில் செம்மலையைச் சேர்ந்த நாகராசா யோகராசா (வயது-54) என்பவரே உயிரிழந்தவராவார்.

குமுழமுனை பகுதியிலிருந்து அளம்பில் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் செம்மலையிலிருந்து தண்ணிமுறிப்பு வயல் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் அளம்பில் சந்திக்கு அருகே சென்று கொண்டிருந்தபோது எதிர் எதிரே மோதி விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் இரு மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவரும் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு வைத்தியசாலை விபத்து பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்திருந்தனர்.

மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நாகராசா யோகராசா நேற்று அதிகாலை மரணமடைந்துள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-7,299)

## பொதுமக்கள்...

மணிக்கு கிளிநொச்சி பசுமைப் பூங்காவில் பொதுமக்கள் அஞ்சலியின் பின்னராக யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் வரப்படவுள்ளது.

கொடிகாமம் நெல்லியடி வீதியூடாக உடுப்பிட்டிக்கு கொண்டு செல்லப்பட்டு வல்வெட்டித்துறை தீருவிலில் பிற்பகல் 2.00 மணி முதல் 3.00 மணி வரை பொதுமக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படவுள்ளது. (ம-7)

## தாய் மண்ணுக்கு...

தனின் உடல் அவரது உறவினர்களிடம் நேற்று மாலை 5 மணிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## சாந்தனின்...

28ஆம் திகதி காலமானார்.

யாழ்ப்பாணம் உடுப்பிட்டியைச் சேர்ந்த சுதேந்திரராஜா 1991ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட சாந்தனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அவருக்கான தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது.

இதன் பின்னர், 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் திகதி ராஜிவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை அனுபவித்த நளினி, முருகன், பேரறிவாளன், சாந்தன் உட்பட அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து, முருகன், ரொபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோருடன் சாந்தனும் திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டார்.

தனது இறுதிக் காலத்தை தனது தாயாருடன் செலவழிக்க வேண்டும். தன்னை இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என சாந்தன் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வந்தார்.

இந்தநிலையில், சாந்தனை இலங்கை அனுப்பி வைக்க இந்திய மத்திய அரசும் அனுமதி வழங்கியது.

ஆனால், சாந்தனுக்கு கடந்த ஜனவரி மாதம் 24ஆம் திகதி உடல் நிலை பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவர் திருச்சி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக சென்னை ராஜிவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு, சிகிச்சை பலனின்றி கடந்த மாதம் 28ஆம் திகதி அதிகாலை சாந்தன் காலமானார். (ம-7)

## தமிழ்த் தேசிய...

சாந்தன் புகழுடல் இன்று ஞாயிற்றுக்கிழமை மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படவுள்ள நிலையில் இன்றைய தினத்தினை தமிழ்த் தேசிய துக்க தினமாக அனுஷ்டிக்க பொது அமைப்புக்களால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ் தேசிய துக்க தினமாக அனுஷ்டிக்க பொது அமைப்புக்கள் நேற்று சனிக்கிழமை ஒன்றுகூடி தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ள குரலற்றவர்களின் குரல் அமைப்பின் இணைப்பாளர் முருகையா கோமகன் இன்றைய தினம் தேவையற்ற களியாட்ட நிகழ்வுகளை தவிர்த்து சாந்தனிற்கு அஞ்சலி செலுத்த திரண்டு வந்து அஞ்சலி செலுத்த அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழகத்தில் நோய்வாய்ப்பட்டு உயிர் துறந்த அரசியல் கைதி தில்லையம்பலம் சுதேந்திரராஜா (சாந்தன்) அவர்களது புகழுடல் இன்று ஞாயிற்றுக்கிழமை மக்கள் அஞ்சலி செலுத்த ஏதுவாக அவரது தாய் மண்ணிற்கு எடுத்துவரப்படவுள்ளது.

வவுனியா, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் முன்னெடுக்கப்படவுள்ள அஞ்சலி நிகழ்வுகளில் வேறுபாடுகளைக் களைந்து அனைவரையும் அணிதிரண்டு அஞ்சலி செலுத்த அழைப்பு விடுத்துள்ள பொது அமைப்புக்கள் அனைத்து இடங்களிலும் நீதி கோரியும் துக்க தினத்தை நினைவுகூரும் வகையிலும் கறுப்புக் கொடிகளை தொங்கவிடவும் கோரிக்கை விடுத்துள்ளன. (ம-7)

## யுத்தத்தால்...

அவர் இதனைக் கூறினார்.

இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த அரசாங்கம் முக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிலையில், அடிப்படை உரிமைகள், சட்டவாட்சி, ஜனநாயக ஆட்சி மீது நீண்டகால தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றமை தொடர்பில் கவலையடைவதாக வோல்க்கர் டேர்க் தெரிவித்தார்.

நிகழ்நிலைக் காப்பு சட்டம், பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டமூலம், ஒலிபரப்பு ஒழுங்குபடுத்தல் சட்டமூலம், அரச சார்பற்ற நிறுவனங்கள் மீதான கண்காணிப்பு மற்றும் பதிவு தொடர்பான சட்டமூலம் என்பன இவற்றுள் உள்ளடங்கும் என அவர் கூறினார்.

இலங்கையில் பல தசாப்தங்களாக நீடித்த உள்நாட்டு யுத்தம் நிறைவடைந்து இந்த வருடத்துடன் 15 வருடங்கள் நிறைவு பெறுகின்றன. எனினும், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இன்னமும் அக்கறை செலுத்தப்படாமல் உள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் தமது அன்புக்குரியவர்களை தொடர்ந்தும் தேடி வருவதுடன், அவர்கள் அச்சுறுத்தல்கள், கைதுகள், வன்முறைகளையும் எதிர் கொள்வதாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் குறிப்பிட்டார்.

இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் காணிப் பிரச்சினைகள் அதிகரித்து வருகின்றமையால், மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அதிகாரப் பரவலாக்கத்திற்கான வழிமுறைகளாக உறுதியளிக்கபட்டிருந்தாலும் தற்போது அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை என குறிப்பிட்ட அவர், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று சுமார் 5 வருடங்கள் ஆகின்ற போதிலும், உயர் நீதிமன்றத்தின் உத்தரவின் மத்தியிலும் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்ந்தும் உண்மை மற்றும் நீதியை தேடிக்கொண்டு இருப்பதாக அவர் தெரிவித்தார்.

உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவிற்கான சட்டவரைபொன்றை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள போதிலும், நம்பத்தகுந்த உண்மைகளை கண்டறிவதற்கான சூழல் இல்லை எனவும் அவர் கூறினார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

தன நிதானய
திகதி - 2024.03.02
சீட்டிழுப்பு இலக்கம் - 1437
J 05 08 38 47 J
56577

மஹஜன சம்பத
திகதி 2024/03/02
சீட்டிழுப்பு இலக்கம் 5407
E 5 9 6 2 4 0

மெகா பவர்
திகதி 02/03/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1755
T 18 07 28 31 51
77036

லக்கி 7 VIP
திகதி 2024.03.02
சீட்டிழுப்பு இலக்கம் 0233
U 5 8 7 6 9 4 U

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3649
சீட்டிழுப்பு திகதி 02.03.2024
I 05 41 66 75
I 68221

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.03.02
சீட்டிழுப்பு இலக்கம் 0716
தனுசு 45 48 52 54 தனுசு
46406 07

உத்தியோகபூர்வ முடிவுகள்
02.03.2024 வெற்றி வாரம் 115 வர்ணம் நீலம்
K 5 0 9 7 4 7
O 30,268,280.00
தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2281 வர்ணம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 02.03.2024 தினம் சனிக்கிழமை
07 25 33 65 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 75,846,038.40

சனிதா
திகதி 2024.03.02 வெற்றி வாரம் 4542
05 21 33 68 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,632,536.80

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4093 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.03.02 தினம் சனிக்கிழமை
12 23 25 37 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 8,950,388.40

கப்ருக
P 29 05 16 20 22
1557 சிவப்பு 02.03.2024 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 509,407,954.20

ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம்: 2207
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.95,643,006.40
சீட்டிழுப்பு திகதி: 2024.03.02
06 27 57 59 W

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலைதீவில்...

கிளிநொச்சி - பூநகரி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பாலைதீவு புனித அந்தோனியார் தவக்கால திருத்தல வருடாந்த திருவிழா நேற்று சனிக்கிழமை நடைபெற்றது.

இதற்காக பெருமளவான பக்தர்கள் தமது படகுகளில் ஆலயத்திற்கு சென்றனர்.

இதன்போது சென்ற இரண்டு படகுகள் மோதுண்ட விபத்தில் காயமடைந்த எழு பேர் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-7,33)

## கொத்து...

சோற்றுப்பொதி 25 ரூபாவினாலும் அதிகரிக்கப்படவுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (ம-7)


### பிரபல ஜோதிடர் குமாரசாமி யாழ். விஜயம்

திருமணத்தடை, மணவாழ்க்கையில் நிம்மதி இல்லையா? காதல், நோய், கல்வியில் மேன்மை இன்மை, தொழில் மேன்மை இன்மை அனைத்து விதமான பிரச்சினைகளுக்கும் முன் அனுமதி பெற்று வரவும்.

077 877 8470

இடம் : தெரேசா இன் (THERESA INN) 72, நக்கா வீதி, சுண்டுக்குளி

(19312)

### மற்றுமொரு புதிய பஸ் சேவை ஆரம்பித்துள்ளனர்

Village Hotel Jaffna Express

அச்சுவேலி → புன்னாலைக்கட்டுவன் →
உரும்பிராய் → திருநெல்வேலி →
யாழ்ப்பாணம் → கொழும்பு

கட்டணம் - 2700/=

தொடர்புகளுக்கு
077 544 8503

(19318)

### மொத்த கொள்வனவு

400g அங்கர் பால்மா, யோகட் மொத்தக் கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்.

Happy Super market - உரும்பிராய்

077 945 5167

(19343)

### சுப்பர்மாக்கட் வேலையாள் தேவை

உரும்பிராயில் அமைந்துள்ள சுப்பர்மாக்கட் ஒன்றிற்கு பொருட்கள் நிறுத்து கட்டுதல், அடுக்குதல் போன்ற வேலைகளிற்கு பெண் பணியாளர் தேவை. வயதெல்லை : 20-30

077 945 5167

(19343)

### வீடு விற்பனைக்கு

வேம்படி வீதி, யாழ்ப்பாணத்தில் வீடு மற்றும் கடை விற்பனைக்கு உண்டு. வாங்குபவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
077 710 9016

(19332)

### காணி விற்பனைக்கு

இராசபாதை வீதியில் வீட்டுடன் கூடிய 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

077 986 5457

(19306)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

### இராஜ மருத்துவம்

பேரறிஞர் Dr.K.பாலசுப்பிரமணியம் சிறப்பு ஆலோசகர்

மீண்டும் யாழ்ப்பாணத்தில் பக்கவாதம், மூட்டுவாதம், சூதகவாயு, நெஞ்சுக்குத்து, நெஞ்சடைப்பு, பாலியல் குறைபாடுகள், தொய்வு, நீரிழிவு, நித்திரையின்மை, மனநோய், நோவு, விஷகடிக்கு சிகிச்சை பெற்றுக்கொள்ள 076 274 4488

வல்லை வீதி, சங்கானை

(C-8454)

### மணமகள் தேவை

1984 இல் பிறந்த, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கண்பார்வையற்ற நிரந்தர வருமானம், சொந்த வீடும் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.

Viber or Whatsapp
0044 7578 626565
077 251 9150
Email add: rajasasikumar@gmail.com

(19217)

### J & J. Tailors

தையல் பயிற்சி வகுப்புக்கள்
புதிய மாணவர்கள் (பெண்கள்) சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.
தொழில் வாய்ப்பும் உண்டு.

077 452 2224

(19169)

### வேலையாட்கள் தேவை

திருநெல்வேலி சுப்பர்மார்ட்டுக்கு வேலையாள் தேவை.
- முகாமையாளர்
- பணியாளர்கள்

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

075 759 0998
077 805 9203

(19344)

### தேவை

யாழ் நகரில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனத்திற்கு சுத்திகரிப்பாளர் ஆண், பெண் இருபாலாரும் தேவை. பகுதி நேர வேலைக்கு ஆட்கள் ஏற்றுக்கொள்ளப்படுவர்.

074 056 7791

(19333)

### அம்மி, ஆட்டுக்கல், திருகை என்பவற்றை உங்கள் வீட்டுக்கு வந்து பொழிந்து தரப்படும்.

077 453 0962

(19328)

### HOSPITALITY & EVENT MANAGEMENT CLASSES IN JAFFNA

Canada, UK, Australia போன்ற நாடுகளில் வேலை வாய்ப்புடன் கூடிய கற்கை நெறி

- Diploma in Event Management
- Diploma in Hospitality Management
- Diploma in Food & Beverage Management

மேற்படி கற்கைநெறிகளை பூர்த்தி செய்தவர்களுக்கு எம்மால் வெளிநாடுகளில் வேலைவாய்ப்பிற்கான உத்தரவாதம்.

Hotline : 076 9696 298 / 077 7042 918

British College Of Hospitality Management
275- 2/1, Clock Tower Road, Jaffna.

(யாழ் மத்திய பஸ் நிலையத்திலிருந்து 05 நிமிட தூரத்தில் அமைந்துள்ள அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்)

(19326)

### இலவச மருத்துவ ஆலோசனைகள் யாழ்நகரம்

தாமதமடையும் குழந்தைப் பாக்கியம், IVF/IUI தோல்விகள் தொடர்பான விசேட இலவச ஆலோசனைகள். அதி நவீன IVF முறைகளும் அதிகூடிய வெற்றி வீதங்களும் தரும் சிகிச்சை முறைகள் தொடர்பான விளக்கங்கள்...



Dr.G.Sujaharan அவர்களைச் சந்திப்பதற்கு சந்தர்ப்பம்!

IVF Clinic

No.15/3, முதலாம் ஒழுங்கை, யாழ். பருத்தித்துறை வீதி, யாழ் நகரம் (ஆஸ்பத்திரிச் சந்திக்கு அருகாமையில்)

Date - 08.03.2024 வெள்ளிக்கிழமை
Time - காலை 9.00 மணி - மாலை 7.00 மணி வரை

(19292)

### விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி வசதிகள்

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show money) வசதிகள்

தொடர்புகளுக்கு :
074 17 37 684

(19340)

### காணி விற்பனைக்கு

அல்லைப்பிட்டி 1 ஆம் வட்டாரத்தில் பிரதான வீதி முகப்பாக 33 பரப்பு பனங்கூடல் காணி விற்பனைக்கு உண்டு.

076 545 8446

(19339)

### Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | | |
|---|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - | 268 /= | Max 5Kg |
| 1 Kg றவை | - | 286 /= | |
| 1 Kg அரிசி மா | - | 196 /= | |
| 1 Kg Prima கோதுமை | - | 188 /= | |
| 1 Kg தீட்டல்பச்சை அரிசி | - | 166 /= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - | 295 /= | |
| 400g Sustagen சஸ்ரயன் | - | 3600 /= | ~~3900/=~~ |
| 1 Kg சன்லைட் றோஸ் பவுடர் | - | 360 /= | ~~450/=~~ |
| 01 Baby Soap | - | 112 /= | ~~145/=~~ |
| 01 Lux Soap Rose | - | 145 /= | ~~175/=~~ |
| 300g நெஸ்டமோல்ட் | - | 580 /= | ~~620/=~~ |
| 400g Anlene | - | 1259 /= | ~~1350/=~~ |
| 180ml Sunsilk சம்போ | - | 440 /= | ~~480/=~~ |

1055/=



~~1110/=~~

யோக்கட் மொத்த கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30

(19343)

### சாரதி தேவை

வான், ஆட்டோ ஓடத்தெரிந்தவராகவும் அலுவலக வேலைகளுக்கு உதவுபவராகவும் இருக்க வேண்டும்.

சம்பளம்: 40'000/-





வயது: 21 முதல் 40 வரை
தொடர்புக்கு:-
0777068777

(C-8459)

### V2 VISA SERVICES
கனடா

077 77 28 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-8559)

### G.C.E(A/L) இணைந்த கணித வகுப்புக்கள்

G.C.E (A/L) இணைந்த கணித வகுப்புக்கள் Personal Class & Group class அனுபவமிக்க ஆசிரியரினால் விரிவான விளக்கத்துடன் கற்பிக்கப்படும்.

076 843 1371

(19336)

### மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1990 இல் பிறந்த நற்குணமுள்ள ரோகிணி நட்சத்திரம் செவ்வாய் குற்றமற்ற பட்டதாரி மணமகளுக்கு உள்ளூரில் அல்லது கனடாவில் வசிக்கும் தகுதியான மணமகன் தேவை.

076 149 2546
077 884 5745

(19024)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org